
ஆரம்பம் 1969 பெப்ரவரி

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய - சமூக - இலக்கிய வெளியீடு


டிசம்பர் - 2024





100/=






"எல்லா வேண்டல்களையும் மன்றாட்டுகளையும் இறைவனிடம் ஏறெடுங்கள்; எப்போதும் தூய ஆவியின் துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள். இதில் உறுதியாய் நிலைத்திருந்து, விழிப்பாயிருங்கள்; இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்"

எபேசியர் 6:18



"குளிர்ந்த பானம் கோடைக் காலத்தில் எப்படி இருக்குமோ அப்படியே உண்மையான தூதர் தம்மை அனுப்பினவருக்கு இருப்பார்; அவர் தம் தலைவருக்குப் புத்துயிரளிப்பார்."

நீதிமொழிகள் 25:13

ISSN : 2012-6352 Reg No 187317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 54 | டிசம்பர் 2024 | இதழ் - 11

- **ஆசிரியர் :** அருட்தந்தை. பிறைனர் செலர்
- **துணையாசிரியர் :** திரு. பெஸ்லியோ வாஸ்
- **நூல் வடிவமைப்பு :** திருமதி. சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபால் செலவு உட்பட)


## அன்புடன் உங்களோடு ...

"இறைவனாம் இயேசு குழந்தை வடிவில் நம்மிடையே இன்று பிறந்தாரே!
நிறைவான வாழ்வை மாந்தர் நம்மோடு பகிர அவரும் வந்தாரே!
கறைகள், கண்ணீர், கசப்புகள் நீக்கி கனிவுடன் நம்மைக் காப்பாரே!
குறைகள் குற்றங்கள் நீங்கி நாமும் பரமனின் பாதம் வருவோமே!

நம்மிடம் பிறந்த இயேசுவை நாமும் பணிவோடு ஏற்று மகிழ்வோமே!
அன்போடும் பணிவோடும் அவரைப்போல் அவனியில் வாழ முயல்வோமே!
பண்புநிறை வாழ்வை பாங்குடன் நாம் பாரினில் வாழ நினைப்போமே!
கண்மணி போலக் காக்கும் கடவுள் இன்றும் என்றும் நம்மோடே!

முன்பொரு காலத்தில் பெர்சியரை ஆண்டுவந்த 'ஷா' என்ற மன்னர் மக்கள் மீது அளவு கடந்த அன்பும் அக்கறையும் கொண்டவராக இருந்தார். எந்தளவுக்கு என்றால், இரவு நேரங்களில் மாறுவேடத்தில் நகர்வலம் சென்று மக்களோடு பேசுவார். அப்பொழுது அவர்கள், சொல்லக்கூடிய குறை நிறைகளைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு எது தேவையோ அதை நிறைவேற்றுவார். இதனால் மக்கள் அனைவரும் அவரது ஆட்சியில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் மன்னர் ஊரில் இருக்கக்கூடிய பொதுக் குளியலறைகள் (Common Bathroom) பகுதிக்குச் சென்றார். அங்கு மக்கள் குளிப்பதற்காகத் தண்ணீர் வெதுவெதுப்பான நிலையில் வைக்கப்பட்டிருக்கும். வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பக் கூடியவர்கள் அதில் மகிழ்ச்சியாகக் குளித்துவிட்டு, வீட்டுக்குச் செல்வார்கள். இப்படி மக்கள் யாவரும் மகிழ்ச்சியாகக் குளிக்க, தண்ணீரைச் சூடாக்குகின்ற பணியை யார் செய்கின்றார் என்பதைப் பார்க்க மன்னர் உட்புறம் சென்றார். அங்கு ஒரு தாழ்வான அறை ஒன்று இருந்தது. அதில் ஒரு பெரியவர், நாள் முழுவதும் வெது வெதுப்பாக இருக்கக்கூடிய அளவில் தண்ணீரைச் சூடாக்கிக் கொண்டிருந்தார். சாதாரண உடையில் இருந்த மன்னர் அம்மனிதரிடம் பேச்சுக் கொடுத்தார். அம்மனிதர் மன்னரிடம், "நாள் முழுவதும் இந்த இருட்டு அறைக்குள் வெக்கையைத் தாங்கிக் கொண்டு வேலை பார்த்தாலும், மக்கள் மகிழ்ச்சியாகக் குளித்து விட்டுச் செல்வதைப் பார்க்கும்போது எனக்கும் மனம் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார். அத்தோடு நின்றுவிடாமல், அவர் தன்னிடம் இருந்த கொஞ்ச உணவையும் மன்னரோடு பகிர்ந்துகொண்டார்.

இதைப் பார்த்து மன்னருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. சிறிது நேரம் அவரிடம் பேசிவிட்டு இன்னொருநாள் வருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

ஒரு சில நாட்களுக்குப் பிறகு மன்னர் மீண்டும் அந்த மனிதர் இருக்கும் இடத்திற்குச் சென்று ......

- தொடர்ச்சி 04ம் பக்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

1. புனைகதைகளை விட்டு விலகு ................................ 02

2. மாணவர் பக்கம் ................................ 05

3. உலகை மாற்றிய புத்தகங்கள் ................................ 06

4. வெற்றி மனிதனின் அடையாளம் ................................ 08

5. நிக்கோலஸ் கோப்பர்னிக்கஸ் ................................ 10

6. மதிப்பிழந்த சிற்பிகள் ................................ 11

7. கபடதாரிகள் ................................ 12

8. கடுகுக்கதை ................................ 14

9. இலங்கையில் பொதுக்கல்வியும் ................................ 15

10. இலக்கிய மஞ்சரி ................................ 17

11. நூற்றைம்பது ரூபா ................................ 19

12. மாட்டுக்குடிலில் ஜனனம் ................................ 21

13. பார்வைகள் பலவிதம் ................................ 21

14. மனநலப் பாதிப்புகள் ................................ 22

15. அரசியல் ................................ 24

16. வினாவிடைப் போட்டி ................................ 26

17. திருஅவைச் செய்திகள ................................ 27

18. போட்டி முடிவுகள் ................................ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைகதைகளை
## விட்டுவிலகு!

வே. மரிய அல்போன்ஸ்



**இறை அறிவைத்தேடுதல்**

பக்தியைப் பரப்பும் நூலாகவே பலராலும் கருதப்படுகிறது விவிலியம். இது தவறான அணுகுமுறை அன்று. பக்தியைத் தூண்டுவதையே விவிலிய வாசிப்பின் பயனாகப் பார்க்கிறது கத்தோலிக்கப் பாரம்பரியம். பக்தி வளர்க்காத விவிலிய வாசிப்பு அரைகுறையானதாக மதிப்பிடப்படுவதும் உண்மை. இத்தகைய நோக்கில், விவிலிய மாந்தர்களின் வாழ்வு பக்திப் பரவசம் வளர்ப்பவை. ஆயினும் பக்தியை வளர்க்கவும் பரவசம் ஊட்டவும் விவிலிய நூற்கள் எழுதப்பட்டதாகக் கருத இயலாது.

படைத்த இறைவனை அறிவது, அவரை அன்பு செய்வது, அவருக்கு தொண்டுகள் ஆற்றுவது, சான்றாக வாழ்வது என வாசிப்பின் நோக்கங்கள் விரிவடைகின்றன. கடவுளை அறிவது விவிலிய வாசிப்பின் முதல் நிலை: அன்பை செயல்களால் வெளிப்படுத்துவது வாசிப்பின் இறுதி நிலை. நாம் அறியாத கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் பக்திப்பரவசத்துடன் முடிந்துவிடும். மாற்றாக, விண்ணுலகத் தந்தையின் விருப்பம் நிறைவேற்ற (மத் 7:21) ஆழ்ந்த வாசிப்பு தேவைப்படுகிறது.

இறைவனைத் தொழுவதும் அவருக்குத் தொண்டாற்றுவதும் வாசிப்பிலிருந்து துவங்குகின்றன. இத்தகைய பொருள் நிறைந்த வாசிப்பிற்கு வழி வகுத்துள்ளார் திருத்தூதர் பவுல். அறிவார்ந்த முதிர்ச்சியைத் தொடங்கத் திருஅவை பெற முதற்சுழி வரைந்தவர் தூய பவுல். அவரது திருமுகங்கள் இதற்கான சான்றுகள்.

உள்ளார்ந்த இறைதேடலுக்கு உரமிட்ட புனித பவுலின் நடைமுறை அறிவுரைகள் நம் இளையோருக்கும் பயனுள்ளவை. இயேசுவை ஆழமாக அறியவும், அவரது ஒப்பற்ற அன்பை அனுபவிக்கவும் அவை வழிகாட்டுகின்றன. இறை அறிவுத் தேடலை இலக்காகக் கொள்ளும் இளம் பருவத்தினருக்குப் பவுலின் பரிந்துரைகள் எவை என்பதைப் பார்ப்போம்.

**புனைக்கதைகளை விட்டுவிலகல்**

“உலகப்போக்கிலான புனைக்கதைகளையும் பாட்டி கதைகளையும் விட்டு விலகு” (1 திமொ 4:7) என தன் சீடர் திமொத்தேயுவிற்கு அறிவுறுத்தியவர் புனித 'பவுல்'. யூத சமயத்தின் புனைவுகளில் புதையுண்டதால், புதிய நெறியைப் பின்பற்றிய கிறிஸ்தவர்களைச் சீற்றத்துடன் எதிர்த்தவர் 'சவுல்' (திப 9:1-2).

புனைவுகள் கவர்ச்சியானவை: இதயத்தை ஈர்ப்பவை. அதேவேளை, உள்ளர்த்தங்களை உணராத பொய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது கட்டப்படும் சமூகம் பின்னோக்கியே செல்லும். புராதனப் புரிதல்களில் நம்பிக்கை கொள்ளும் சமயம் விடுதலைக்கான விதைகளை விதைப்பதில்லை; மூர்க்கமான மூட நம்பிக்கை பதர்களையே முளைவிடச் செய்யும். எடுத்துக் காட்டாக, சாதி அமைப்பினை நிலை நாட்டப் பயன்படுத்தப்படும் பரப்புரைக் கதைகளை நடுநிலையுடன் ஆய்வுசெய்தால் புனைவு களின் அபத்தம் புரியும். பொருள் செறிவற்ற புனைவுகளில் மையம் கொள்வது ஆபத்தானது. பெரும் பிழையின் வன்கொடுமைகளை இதயம் உணர்ந்தும் மாற்றம் நிகழ்கிறது. சமயத்தின் கொடூர முகம் 'சவுல்'! நிறைவான விடுதலை வழங்கும் இதன் இனிய முகம் 'பவுல்'! பழமைப் பார்வையின் குரூரம் அறிந்த பவுல், புனைக்கதைகளையும் பாட்டி கதைகளையும் விட்டுவிலக வைக்கிறார். மாற்றாக, “இவற்றை கட்டளையாகக் கொடுத்துக் கற்பித்து வா” (1திமொ 4:11) என்கிறார். தொடரும் அவரது அறிவுரை, “நான் வரும்வரை விசுவாசிகளுக்கு மறைநூலைப்படித்துக் காட்டுவதிலும் அறிவுரை வழங்குவதிலும் கற்பிப்பதிலும் கவனம் செலுத்து” (1திமொ 4:13) என்பது அறிவார்ந்த அணுகுமுறைக்கான அறைகூவல்கள்.

### மாற்றுக் கருத்துடையோரைப் பயிற்றுவித்தல்

தகுந்த, தரமான படிப்பினைகள் தந்தாலும் மாற்றுக் கருத்துகள் எழுவதும் எழுப்புவதும் முதிர்ச்சிக்கான முயற்சிகள். அவற்றை முளையிலேயே கிள்ளிவிட நினைப்பது எதிர்ப்பை அதிகரிக்கும்; மோதலை உருவாக்கும். ஒருவர் தன் கருத்தை அழுத்தமாகக் கூறுவதால் மாற்றம் நிகழ்வதில்லை. “மடத்தனமான அறிவற்ற விவாதங்கள் சண்டைகளைத் தோற்றுவிக்கும்” (2 திமொ 2:23) என எச்சரிக்கிறார் பவுல். “வீண் விவாதங்கள் தவிர்த்து, மாற்றுக் கருத்துடையோருக்கும் பணிவோடு பயிற்றுவிப்பவராகவும் இருக்க வேண்டும்” (2 திமொ 2:25). அவர்களிடம் காட்டும் கனிவும் கண்ணியமும் அவர்களின் மனத்தெளிவிற்கான காரணங்களாக அமையலாம் (2 திமொ 2:26).

எதிர் சிந்தனையுடையவர் எவராயினும் பயிற்றுவிக்கும் நோக்குடன் ஒருவர் தம் எண்ணங்களைப் பகிர்வது நற்பண்பு. மாற்றுக் கருத்துடையவர் குரல்வளைகளை நெரிக்கும் வன்முறைச் சூழல் வளர்ந்துவரும் இக்காலகட்டத்தில், பவுலின் வழிகாட்டுதல்கள் சகிப்புத்தன்மையை விதைப்பது நிச்சயம். பரந்த மனம் படைத்தவருக்கே உரிய இந்த பண்பு நம் இளையோர் வாழ்வை அருள்நெறிகளால் அடையாளப்படுத்தும். இன்சொற்களால் இளையோரின் இதயம் குளிரும்! இன்சொற்களால் சுடர்விடும் இளையோரின் அர்ப்பணச் செயல்பாடுகள் அடிப்படை மாற்றத்திற்கான அடித்தளம் அமைக்கும். மாற்றான் தோட்டத்து முல்லைக்கும் மணம் உண்டு என்று உணர்ந்தால், அறிவுத்தேடல் கூட்டு முயற்சியாக மலரும். எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்கருத்துக்களை வீசியெறிவது வீணான முயற்சி. பொதுக்கருத்து உருவாக்க விழைபவர் பொறுமையுடன் தம் எண்ணங்களை முன்வைப்பதால் ஏற்படும் தாக்கம் பெரிது.

### அறிவுத் தெளிவாக்கும் இயக்கமாகுதல்

தான் உருவாக்கிய திருஅவைகள் அறிவார்ந்த இயக்கமாக உருவாக திருத்தூதர் பவுல் அயராது உழைத்தது வரலாறு. சோம்பித் திரிந்தவர்கள் மற்றவர்களை குழப்பிவிடலாகாது என்பதில் கருத்துடன் செயல்பட்டவர் பவுல். இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது தெசலோனிக்கத் திருஅவை. உயிர்த்தெழுதல்பற்றி கருத்துரைகள் ஒரு பகுதியினரை உறக்க நிலைக்குத் தள்ளிவிட்டது. உழைக்க மனம் இல்லாத இவர்கள் பிறர் வேலைகளில் தலையிட்டதைப் பவுல் கடுமையாகக் கண்டித்தார். “பகலைச் சார்ந்த நாம் அறிவுத் தெளிவோடு இருப்போம்” (1தெச 5:8) என வழிகாட்டினார். பொதுநலனுக்காக அவரது வழிகாட்டல் அறிவுத்தெளிவை உள்ளடக்கியது. உணர்வுகள் தாண்டி, அறிவின் ஆற்றலே நீடித்த பலன் விளைவிப்பதை பவுல் நன்கு அனுபவித்தவர். எனவே, தனது முயற்சியால் முளைவிட்ட திருஅவைகள் “விழிப்போடு அறிவுத் தெளிவோடும்” (1தெச 5:6) செயல்பட விரும்பினார்.

அறிவுத்தெளிவு, விழிப்புணர்வின் விரிவாக்கமாக, “ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள்” (எபே 5:15) என்கிறார். “அறிவிலிகளாய் இராமல் ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்துகொள்ளுங்கள்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எபே 5:17) என அவசரப்படுத்துகிறார் திருத்தூதர். இதற்காக, முந்தின நடத்தையை மாற்றுவது நிபந்தனையாகிறது; புதிய மனிதருக்கு உரிய இயல்பை அணிவது நிலையான தீர்மானமாகிறது. அறிவுத் தெளிவுடன் எடுக்கப்படும் முடிவு "உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்" (எபெ 4:24ஆ). ஆகவே, "இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக!" (எபே 3:18-19).

திருஅவை அறிவுத்தேடல் தனிநபர் ஒருவரின் முயற்சி அன்று: இறைமக்கள் சமூகத்தின் ஒருமித்த தேடல். ஒருவரின் தனிப்பட்ட வரத்தால் வளர்வதில்லை திருஅவை. அனைத்து உறுப்பினர்களும் ஒத்தக் கருத்துடன் ஒன்றிணைந்து ஓர் இயக்கமாகத் தேடுவதே இறை அறிவு. இயக்கமாகச் சேர்ந்து வருவது இளையோரின் அறிவுத் தெளிவை ஆழப்படுத்துகிறது. சமகால நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்து தகுந்த பதில் தரத் தூண்டுகிறது. இதற்கான முயற்சிகள் அவர்களிடையே தோழமையை உருவாக்குகிறது. உணர்வும் அறிவும் – கொள்கைத் தெளிவும் பிடிப்பும் - அவர்களின் உறவை வலுவாக்கும்; சமூகச் செயல்பாட்டைத் துரிதப்படுத்தும். இயக்கமாகும் இளையோர் அறிவைக் கண்டடைவர். தகவல் சேகரிப்பாக அறிவுத்தேடல் முடங்காது. சமூக மாற்றத்திறகான ஆயுதமாக அறிவு அர்ப்பணிக்கப்படும்.

**அறிவே மாற்றத்திற்கான ஆயுதம்**

அறிவு "தூய ஆன்மாக்களில் நுழைகிறது; அவர்களைக் கடவுளின் நண்பர்கள் எனவும் இறைவாக்கினர்கள் எனவும் ஆக்குகிறது" (சாஞா 7:27). அதோடு "ஞானிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே உலகின் மீட்பு அமையும்" (சாஞா 6:24) என்பன ஒன்றுபட்ட அறிவுத்தேடலின் தேவையை முன்வைக்கின்றன. இவற்றோடு ஒப்பிடும்போது இன்றைய உலகிலும் திருஅவையிலும் அறிவார்ந்த மாற்றம் விளைவிக்க விரும்பும் இளையோருக்கு பவுலின் பரிந்துரைகள்: புனைக்கதைகளையும் பாட்டி கதைகளையும் விட்டுவிலகு! - கூரிய ஆயுதங்கள்!.

## அன்புடன் உங்களோடு .....

.... அவரிடம் பேசினார். சென்றமுறை மன்னர் அவரிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள் .... நான் தருகிறேன்" என்று சொல்லிவிட்டு, தான் யார் என்பதை அவருக்கு வெளிப்படுத்தினார். அரசர்தான் மாறுவேடத்தில் வந்து தன்னோடு பேசிக்கொண்டிருக்கிறார் என்பதை தெரிந்து கொண்ட அம்மனிதர், "மன்னா! எனக்கு எதுவும் வேண்டாம். யாருமே இதுவரை வராத இப்பகுதிக்கு தாங்கள் வந்து, என்னோடு பேசி, உங்களது பொன்னான நேரத்தை எனக்காகச் செலவழித்தீர்களே அதுவே எனக்குப் போதும்" என்றார்.

எவ்வாறு அம்மன்னர் தனது நிலையில் இருந்து இறங்கி வேலையாளோடு உறவாடினாரோ, அதேபோன்று நம்மாண்டவர் இயேசு தனது நிலையில் இருந்து இறங்கி, நமக்காக மனித அவதாரம் எடுத்தார். அதைத்தான் கிறிஸ்மஸ் விழா என்று கொண்டாடுகின்றோம்.

மக்கள் அனைவரும் எல்லா நலமும் வளமும் மீட்பும் பெறுவதற்கு இயேசு எப்படி தன்னிலையிலிருந்து இறங்கி வந்தாரோ அதுபோன்று ஒவ்வொருவரும், இந்த உலகமும் இதில் வாழும் மக்களும் வாழ்வு பெறுவதற்காகத் தங்களுடைய நிலையிலிருந்து இறங்கி வரவேண்டும்.

இன்றைக்குப் பலரும், "நான் எவ்வளவு பெரிய ஆள்: நான் எப்படி என்னுடைய நிலையிலிருந்து இறங்கி வருவது?" என்ற வரட்டுக் கௌரவத்தோடு இருப்பதைப் பார்க்க முடிகிறது. இதுபோன்று இறைவன் நினைத்திருந்தால் இந்த உலகிற்கு மீட்பு கிடைத்திருக்குமா? ஒருபோதும் கிடைத்திருக்காது என்பதுதான் உண்மை. ஆகையால் ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைகளில் இருந்து இறங்கிவந்து, தங்களிலும் வறிய, எளிய மக்களுக்கு இயன்ற நன்மைகளைச் செய்ய முன்வரவேண்டும். அப்பொழுதுதான் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா உண்மையான அர்த்தம் பெறும்.

ஆகவே, இந்த கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழாவில் ஒவ்வொருவரும் இறைவனைப் போன்று இந்த மானிட சமூகத்தின் மீது இரங்கவும், ஆண்டவர் இயேசுவைப்போன்று தன்னுடைய நிலையிலிருந்து இறங்கி வந்து மக்களுக்குப் பணி செய்யவும் வரம் கேட்டு, அதன்படி வாழ்வோம்.

"மனிதர் கருணையைக் கைவிட்டாலும், கடவுள் ஒருநாளும் கைவிடுவதில்லை" என்கிறார் கெப்பர் என்ற அறிஞர். ஆகையால், கடவுளின் இப்பெருங் கருணையை நினைவுகூர்ந்து, ஒவ்வொருவரும் அவரைப் போன்று நம்மோடு வாழும், மக்களிடம் கருணையோடும், இரக்கத்தோடும் வாழ்வோம். அதன் வழியாக இறையருளை நிறைவாய்ப் பெறுவோம்!

ஆசிரியர்

அருட்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவம் மாணவர் பக்கம்

க.பொ.த. உயர்தரம்

## மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

தொடர் XXVIII

- நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**

நவம்பர் – 2024

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 1 | 5) 1 | 9) 4 |
| 2) 4 | 6) 3 | 10) 1 |
| 3) 3 | 7) 2 | |
| 4) 2 | 8) 4 | |

1. பாஸ்கு விழா கொண்டாடுவது பற்றி உறுதிசெய்த பொதுச்சங்கம் எது?
   1. எபேசு 2. நிசேயா 3. கல்சிடோன் 4. 2ம் வத்திக்கான் 5. திரிதெந்தீன்

2. இயுத்திகரின் கருத்து ஒரு பேதகம் எனக்காட்டியவர் யார்?
   1. தூய பிலேவியன் 2. தூய அந்தனாசியார் 3. தூய பசில்
   4. தூய சிறில் 5. தூய அந்தோனியார

3. கி.பி 1073இல் VII ஆவது கிரகோரி எனும் பெயரில் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டவர் யார்?
   1. கருதினால் வொட்சன் 2. கருதினால் ஹில்டேபிராண்ட் 3. கருதினால் டேமியன்
   4. கருதினால் வின்பிறிட் 5. கருதினால் தோமஸ்

4. ஆண்டவரின் இறுதி இராஉணவு "தனி நினைவு கூறல்" மட்டுமே எனக்கூறியவர்:
   1. சுவிங்லி 2. மாட்டீன்லூதர் 3. ஜோண் வெஸ்லி
   4. ஜோண் கல்வின் 5. ஆபிரகாம் லிங்கன்

5. பிரான்ஸ் - ரசிய யுத்தம் ஏற்பட்டமையால் இடைநிறுத்தப்பட்ட திருச்சங்கம் எது?
   1. 2ம் வத்திக்கான் 2. 1ம் வத்திக்கான் 3. பரீஸ்
   4. திரிதெந்தீன் 5. புளோரன்ஸ்

6. 1929இல் இத்தாலிய அரசுடன் செய்து கொள்ளப்பட்ட இலாத்திரன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் யார்?
   1. திருத்தந்தை XII அருளப்பர் 2. திருத்தந்தை XI பத்திநாதர் 3. திருத்தந்தை IX சிங்கராயன்
   4. திருத்தந்தை VII பெனடிக் 5. திருத்தந்தை Xயோண்

7. பௌத்த ஆணைக்குழுவின் அறிக்கையின்படி இலங்கை அரசினால் முதன்முதலில் மருத்துவ சேவையில் இருந்து துறவிகள் நீக்கப்பட்டது எப்போது?
   1. 1970களில் 2. 1958இல் 3. 1969களில் 4. 1927இல் 5. 1930களில்

8. திருவழிபாட்டின் உத்தியோகபூர்வ மொழி எது?
   1. எபிரேயம் 2. இலத்தீன் 3. கிரேக்கம் 4. தமிழ் 5. சிங்களம்

9. இறை வார்த்தைக்கு முக்கிய இடம் கொடுத்தலும் அதற்கு உயிரோட்டமுள்ள தன்மையும், மரியாதையும் அளித்தது எப்போது?
   1. போர்த்துக்கேயர் காலத்தில் 2. ஆங்கிலேயர் காலத்தில்
   3. தேசிய மயப்படுத்தப்பட்ட பின் 4. சுதந்திரத்தின் பின் 5. தற்காலத்தில்

10. கொழும்பு மேற்றாசனத்தை இலங்கையின் "கொழும்பு உயர் மறைமாவட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்தவர் யார்?
    1. திருத்தந்தை 2ம் அருளப்பர் 2. திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்
    3. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் 4. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
    5. திருத்தந்தை 6ம் சின்னப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகை மாற்றிய புத்தகங்கள்

உலக வரலாற்றை வரி தவறாமல் ஆழமாக வாசித்துப் பார்த்தால் மனிதனுடைய அறிவும் ஆற்றலும்தான் உலகை வளர்த்துள்ளன என்பது தெளிவாகத் தெரிகின்றது. அத்தகைய வீரியம் மிக்க அறிவுக்கு அடித்தளமாக அமைபவை புத்தகங்கள்தான். ராபர்ட் பி. டான்ஸ் என்ற அமெரிக்க எழுத்தாளர் "உலகை மாற்றிய புத்தகங்கள்" *(Books that Changed the World")* என்ற நூலை எழுதினார். அமெரிக்க நூலகமொன்றில் பணி செய்யத் தொடங்கிய இவர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் புத்தக வாசிப்பில் மூழ்கிப் போனார். வாசிப்பின் மூலம் அறிவை வளப்படுத்திக் கொண்ட இவர் பல சிறந்த நூல்களை எழுதினார்; நூலகப் பணியிலும் தனது ஈடுபாட்டுடன் கூடிய உழைப்பினால் பல்கலைக் கழகங்களில் நூலக இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார். இவர் எழுதிய பல புத்தகங்களில் ஒன்றுதான் "உலகை மாற்றிய புத்தகங்கள்". இந் நூலின் முதல் பதிப்பு 1956லும், இரண்டாம் பதிப்பு 1978லும் வெளிவந்தது. இந்நூலில் சுமார் ஐந்து இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்றுத் தீர்ந்து உலகப் பிரசித்தி பெற்றது.

இதன் தமிழ் மொழிபெயர்ப்பு நூலும் பல ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்துவிட்டது. அப்பொழுதே புத்தகங்கள் எப்படி உலகின் போக்கை மாற்றியமைத்துள்ளன என்பதை அழுத்தமான ஆதாரங்களோடு இந்நூல் விளக்கியுள்ளது. உலக உருண்டையின் நெம்புகோல்களாக இருந்த 16 அரிய புத்தகங்களைப் பற்றியதான தனித் தனி ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியது இந்நூல். இந்நூலின் முன்னுரையில், "வெடிமருந்தின் வீரியம்: இந்தப் 16 புத்தகங்களையும் திறனாய்வு செய்கின்ற போது, புத்தகத்தைக் காலம் உருவாக்கியதா? அல்லது காலத்தைப் புத்தகம் உருவாக்கியதா? என்ற கேள்வி எழுகின்றது" என்று நூலாசியரியர் குறிப்பிட்டுள்ளார். மேலும் பொதுவாக எரிந்து வெடியைக் கிளப்பும் திரிபோல சில புத்தகங்கள், வெளியான சில ஆண்டுகளுக்குப் பிறகு முழுச் செல்வாக்குடன் விளங்கியதுண்டு.

ஆடெம் சிமித், கால்ஸ் மார்க்ஸ் ஆகியோரின் நூல்கள் இதற்குப் பொருத்தமான உதாரணங்களாகும். தமது நூல்களின் முக்கியத்துவத்தை உலகம் உணரத் தொடங்கியபோது அவர்கள் உயிருடன் இருக்கவில்லை என்று தனது முன்னுரையில் தெரிவித்துள்ளார். சமூகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் சில புத்தகங்கள் வலுவான அடித்தளம் இட்டுள்ளன என்பதற்கான ஆதாரங்கள் போன்ற ஏராளமான விடயங்கள் உள்ளன. மாவீரர்களின் ஆளுமைக்கு புத்தகங்களே மூல காரணமாக இருந்திருக்கின்றன. உலக வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்தவர் "மாவீரன் அலெக்சாண்டர்'. வெற்றி மேல் வெற்றி பெற்றுக்கொண்டு வந்த அலெக்சாண்டரைப் பாராட்டி பாரசீக மன்னன் ஒரு அழகான வேலைப்பாடுடன் கூடிய தங்கப் பேழையைப் பரிசாக அளித்தார். பேழையைப் பெற்றுக்கொண்ட அலெக்சாண்டர் தன் நண்பர்களிடம், "இவ்வளவு அழகான தங்கப் பேழையில் எந்தப் பொருளை வைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமாக இருக்கும்?" என்று கேட்டார். நண்பர்கள் யோசித்து யோசித்து ஒவ்வொரு பொருளாக சொன்னார்கள். கடைசியில் அலெக்சாண்டர் இந்தப் பேழையில் வைப்பதற்கு மிகப் பொருத்தமானதும் தகுதியானதும் ஒன்றே ஒன்றுதான். அது 'ஹோமர்' எழுதிய "இலியட்" எனும் காப்பிய நூல்" என்று சொன்னான். அவ்வாறு சொன்னது மட்டுமல்ல அலெக்சாண்டர் கடைசியாக இறக்கும் தறுவாயில் அவனது தலைக்குப் பக்கத்தில் அவன் வைத்திருந்தது "இலியட்" நூல் தான் என்பதை அறியும் போது புத்தகத்தின் வலிமையைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

1950ல் "பொது உடமை இயக்கத் தலைவர்கள் சிலர் மீது திருநெல்வேலி காவற்துறையினர் ஒரு சதி வழக்கை தொடர்ந்தனர். கடுமையான முயற்சி யின் பின் சிலரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். இவ் வழக்கின் தொடர்பாக ஆர்.எஸ். ஜேக்கப் என்ற ஆசிரியர் அவர் பணியாற்றிய பாடசாலையில் மாணவர் முன்னிலையிலே கைது செய்யப்பட்டார். அவர் அக்கிராமத்தின் கிறிஸ்தவ தேவாலயப் பாதிரியாராகவும் விளங்கினார். அப்போது அவருக்கு வயது 24 மட்டுமே. விசார ணைக் கைதியாகவே மூன்றரை ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிடந்த அவர் காவல் துறையினரால் கடும் சித்திரவதைகளுக்கு உள்ளா னார். "அந்தத் தலைவர் எங்கே பதுங்கியிருக் கிறார்? இந்தத் தலைவர் எங்கே பதுங்கி இருக்கி றார்? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு துன்புறுத்தினர். ஆனால் அத்தனைத் துயரங்களை யும் தாங்கிக் கொண்டு "தலைவர்கள் இருக்கிற இடங்கள் எனக்குத் தெரியாது" என்று ஒரே பதிலைத்தான் திரும்பத் திரும்பக் கூறினார். ஜேக்கப் 120ற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். ஒரு புத்தகத் திருவிழாவில் அவருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு நிகழ்வில் அவரிடம், "ஐயா! நீங்கள் தெரியாது தெரியாது என்று காவல் துறையினரிடம் பதில் கூறினீர்களே. உண்மையில் உங்களுக்குத் தெரியாதா?" என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "எனக் கெப்படித் தெரியாமல் இருக்கும்? நான்தான் அத்தனைத் தலைவர்களுக்கும் இரகசியமாக தபால் கொண்டுபோய் கொடுக்கும் நபராகச் செயல்பட்டேன்" என்றார். "பின்னர் எப்படி அத்தனைக் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு 'தெரியாது' என்று பதிலளித்தீர்கள்?" எனக் கேட்ட போது, அவர் "அது வேறொன்றுமில்லை, அப்பொழுது நான் உறுதிகொண்ட துணிச்சலான இளைஞன் என்பது உண்மைதான். ஆயினும் நான் அத்தனையும் தாங்கிக்கொண்டதற்குக் காரணம் அதுமட்டுமல்ல, கைதுசெய்யப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன் ஜேர்மன் பத்திரிகையாளன் 'ஜூலியஸ் பூசிக்' எழுதிய *"Notes from the Gallows"* என்ற ஆங்கிலப் புத்தகத்தை திரும்பத் திரும்ப வாசித்திருந்தேன். சாகவே நேர்ந்தாலும் சக போராட்ட வீரர்களைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற கருத்தை என்னுள் ஆழப்பதித்தது அந்தப் புத்தகம்தான். நான் பல புத்தகங்கள் படித்துள்ளேன். எனது மன உறுதிக்குப் புத்தக வாசிப்புதான் மூல காரணம்" என்று பதிலளித்தார்.

கிட்லரால் தூக்கிலிடப்பட்ட எழுத்தாளரும், பத்திரிகையாளருமான ஜூலியஸ் பூசிக் தூக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்ட பிறகு சிறைக்குள் இருந்த வாறே இரகசியமாக எழுதி ஒரு நம்பகமான வார்டர் மூலம் வெளியே கொடுத்தனுப்பப்பட்ட காகிதங்கள்தான் *"Notes from the Gallows"* என்ற புகழ் மிக்க புத்தகமாக பின்னர் வெளிவந்தது. பூசிக் இறந்தபின்னர் அவரது மனைவியால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது தமிழில் "தூக்கு மேடைக் குறிப்புகள்" என்ற தலைப்பில் அப்போதே வெளியாகிவிட்டது. எழுத்தாளர் ஆர். எஸ். ஜேக்கப் சிறையிலிருந்து வெளியே வந்த பின்பு தனது சிறை அனுபவங்களை அடிப்படை யாகக் கொண்டு "வாத்தியார் மரண வாயில்" என்ற இரண்டு நாவல்களை எழுதினார். இந்த நாவல்கள் இரண்டும் சிறை இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

புத்தக வாசிப்பு சமூகத்திற்கு புத்தெழுச்சியும் தனி மனிதர்களுக்கு புத்துணர்ச்சியும் ஏற்படுத்துவ தாகும். வாசிப்புக்கு வசப்பட்ட சமூகம் வளர்ச்சியின் திசையில் முன்னோக்கி நகரும். வாசிக்கும் மனிதர்கள் சமூகத்தில் வளர்ச்சி பற்றி யோசிக்கும் மனிதர்களாகவும், சமூக வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டியாகவும் விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

– 'ஆரோகணம்' –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றி மனிதனின் அடையாளம்!



ஜே. எச். இரத்தினராஜா

ஒவ்வொரு மனிதரும் வித்தியாசமான தனிப்பட்ட திறன்களும், செயல்பாடுகளும் கொண்ட ஆளுமைகளின் அடையாளம் ஆவர். அதனால் தனி மனிதத்திறன் என்பது மிகவும் வேறுபட்ட ஆற்றல்களும், அறிவுத் திறன்களும் சேர்ந்த கூட்டமைப்பு ஆகும். தனி மனிதனை உருவாக்கும் பண்புகளைப் பற்றியோ, அவ்வாறு ஒவ்வொரு மனிதனை உருவாக்குவதில் குடும்பங்களின் பங்கு பற்றியோ அல்லது தனி மனிதனை அடையாளப்படுத்துவதாகக் கணக்கிடப்படும் தனி மனிதனுடைய உடல் அழகைப் பற்றியோ இங்கு கூறப்போவது இல்லை.

சக்தியுடைய தனி மனிதர்களை வார்த்தெடுக்கும் சில பண்புகள் இருக்கின்றன. தன்னம்பிக்கை, குறிக்கோள், ஒரு முகத் தன்மை, சிதறாத கவனம், முடியும் என்கிற உள்ளுணர்வு (Will Power), தளராத உற்சாகம் போன்றவை எல்லாம் தனி மனிதனுடைய ஆற்றலை வெளிப்படுத்தும் வெற்றி அடையாளங்கள் ஆகும். மிகச்சிறந்த தனி மனிதனை வெளிப்படுத்துவது, அவனுக்குள் இருந்து ஒளிவிடும் தன்னம்பிக்கையால் அவன் மற்றவர்களோடு பழகும் விதமே. மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க தன்னால் முடியும்: அதற்கான காரியங்களைச் சரியான நேரத்தில், சரியான முறையில் செய்து முடிக்கக் கூடிய திறமை தனக்கு உண்டு: செயல்படும்போது இடையிடையே குறுக்கிடும் வெற்றி தோல்விகளை சமமாகக் கருதும் மனம் தனக்கு இருக்கின்றது என்கிற மனப்பான்மை உள்ளவனுக்கு இருப்பதுதான் இந்த அசைக்க முடியாத தன்னம்பிக்கையின் அடையாளம்.

ஆனால், அதேநேரத்தில் அளவுக்கதிகமாக தன்னைத்தானே நம்பிக்கொள்வதும் சில சமயங்களில் ஆபத்தில் முடியும். பல தடவை தோற்று ஓடிய குருஸ் அரசனுக்கு கடைசியாக வெற்றிபெற முடிந்ததும், வாய் பேச முடியாத, விழித்திறனை இழந்த, காது கேட்காத ஹெலன் கெல்லர் கல்வித் துறையிலும், புத்தகம் எழுதுவதிலும் புகழ் பெற்றதும், செவித்திறன் இல்லாத பீட் ஓவன் சங்கீதத்தில் பிரசித்தி பெற்றதும் உறுதியான தன்னம்பிக்கையால்தான்.

தனிமனித ஆளுமையை அடையாளப்படுத்தும் இன்னொரு குணம்தான் இலட்சியம். குறிக்கோள். தீர்க்கமான குறிக்கோள் ஒன்றைக் கொண்டிருப்பதும், அதை உறுதியாக பசு மரத்தில் பதிந்த ஆணிபோல பதித்துக்கொள்வதும் வெற்றி ஆளுமையின் பாகம் ஆகும். படிக்க வேண்டும், கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், குழந்தைகளை வளர்க்க வேண்டும், வீட்டையும் காரையும் வாங்க வேண்டும், இதற்கு மேல் இலட்சியம் என்று எதுவும் இன்று பெரும்பாலானோருக்கு கிடையாது.

வேலை கிடைப்பதைக் காட்டிலும் மாற்று இலட்சியம் இல்லாதவர்கள் கிடைத்த வேலையை உதறித் தள்ளியும், விரட்டியடித்தும் மாதங்களையும், வருடங்களையும் கடத்துகிறார்கள். இலட்சியத்துக்கு உரிய படிக்கட்டாக வேலையைக் கருதும்போது வேலையில் நிறைவுபெற முடியும்.

உயர் அதிகாரிகளும், சக ஊழியர்களும் அவரைப் போற்றுவார்கள். எங்கே போக வேண்டும் என்று உறுதியான திட்டம் இருக்கும்போது நம் திறமைகள் எல்லாவற்றையும் அதை நோக்கி மற்றவர்கள் நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்ட பாதையில் இல்லை நாம் பயணிக்க வேண்டியது. நமக்கு என்று சொந்தமாக ஒரு பாதையை நாமே போட்டுக் கொண்டு அதில் நடக்க வேண்டும். உறுதியான குறிக்கோள் என்ற ஒன்று இருந்தால்தான் மூளையும் செயல்திறன் கொண்டதாக மாறுகிறது என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இலட்சியத்துக்குரிய பயணத்தில் நம் கால்கள் பல வழிகளிலும் சென்றால், நம் ஒரு முகமான கவனத்தை நாம் இழந்து விடுவோம். துரோணாச்சாரியார் அம்பை எய்யச் சொன்னபோது, அர்ஜுனன் தன் இலக்கை மட்டுமே குறி பார்த்து அம்பை எய்தான். அவரவர்களுடைய திறமைக்கு ஏற்றவாறு நேரத்தை நிர்வாகம் செய்து இலட்சியத்தை நோக்கிப் பயணப்படுவதே சிறந்தது ஆகும்.

வாழ்க்கையில் சந்திக்கும் தோல்விகளில் சிக்கி அகப்பட்டுப் போகாமல் மனதுடைய ஆற்றலை வலிமையாக்கி, ஒரு அடி பின்னால் செல்லும்போது இரண்டு அடி முன்னோக்கி நடக்க மனதைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். மனதின் ஆற்றல் ஆளுமையை வலிமையுடையதாக்கும். சோம்பேறிக்கு எந்தத் திறமையும் கைவராது என்பது நிதர்சனமான உண்மையாகும். சோம்பேறிக்கு கல்வி மட்டும் இல்லை, எந்த ஒரு முன்னேற்றமும் வாழ்க்கையில் ஏற்படாது.

தளராத உற்சாகம் இருந்தால் எல்லாவற்றையும் கைப்பற்றலாம். உற்சாகம் உள்ளவர்கள் அதை தங்களைச் சுற்றியுள்ளவர்களிடமும் இனிமையான பூவின் நறுமணத்தைப்போல பரவச் செய்துவிடுகிறார்கள். அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியரை வீறுகொண்டு விடுதலையுணர்வு பெற்று எழச்செய்த காந்திஜி தளராத உற்சாகத்தின் சின்னமாக இருந்தார். எதிலும் திருப்தியடையாமை, துக்கம், கோபம், வெறுப்பு, கௌரவம், அலட்சிய மனப்பான்மை, பொறாமை இவைகள் எல்லாம் சர்வசதாகாலமும் வெளிப்படுத்துபவர்களை எந்த மனிதரும் நெருங்குவது இல்லை. திறந்த மனதுடன் பேசும் பேச்சை அடுத்தவர்கள் அதிகமாக விரும்புகிறார்கள். எல்லையில்லாத அறிவு சிறந்த ஆளுமையின் சிறப்பு அம்சமாகும். நல்ல ஒரு கேட்பவராவதும், விசாலமான மனதுடையவராக இருப்பதும், அற்புதமான மனிதருடைய அடையாளம் ஆகும். மற்றவர்கள் நம்மை விரும்ப வேண்டும். தன்னம்பிக்கை, துளிர்விடும் கண்கள், அருவி போல மனம், திறந்த பேச்சு, மாறாத புன்னகை போன்றவையும் மகாத்மாக்களின் அடையாளங்கள் ஆகும். ஆக தன்னம்பிக்கை, இலட்சியம், தளராத உற்சாகம், முடியும் என்ற நம்பிக்கை ஆகியவை பிரகாசிக்கும் தனிமனித ஆளுமை வெற்றியின் சின்னமாக ஆகிறது.

## "டிரம்ப் தான் உதவணும்! போர் நிறுத்தம் செய்ய ரெடி..."

### ஹமாஸ் திடீர் அறிவிப்பு! உற்று கவனிக்கும் இஸ்ரேல்




இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் ஓராண்டிற்கும் மேலாகத் தொடர்ந்து வருகிறது. இதற்கிடையே திடீர் திருப்பமாகப் போர் நிறுத்தத்திற்குத் தயாராக இருப்பதாக ஹமாஸ் அறிவித்துள்ளது.


மத்திய கிழக்கில் கடந்த ஓராண்டுக்கும் மேலாகவே மோதல் தொடர்ந்து வருகிறது. கடந்தாண்டு அக். மாதம் யாரும் எதிர்பார்க்காத வகையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதலை நடத்தியது. இதற்குப் பதிலடியாகக் காசா மீது இஸ்ரேல் போரை ஆரம்பித்து. சுமார் ஓராண்டிற்கு மேலாக இந்த போர் தொடர்கிறது. இதனால் காசாவில் உள்ள பொது மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே போர் நிறுத்தம் செய்யத் தயாராக இருப்பதாக ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். மேலும், அமெரிக்க அதிபராகத் தேர்வாகியுள்ள டிரம்ப், பாலஸ்தீன பிரதேசத்தில் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கடந்த வாரம் தான் இரு தரப்பிற்கும் இடையே அமைதி பேச்சுவார்த்தையை நடத்தி மத்தியஸ்தனம் செய்து வந்த கத்தார், இனி அமைதி பேச்சுவார்த்தையை நடத்த முடியாது என்று சொல்லி விலகி இருந்தது. போர் நிறுத்தத்தில் இரு தரப்பும் சீரியஸாக இருக்க வேண்டும் எனச் சொல்லி கத்தார் மத்தியஸ்தனம் செய்யும் பொறுப்பில் இருந்து விலகி இருந்தது. இந்தச் சூழலில்தான் ஹமாஸ் தரப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்கோலாஸ் கோப்பர்னிக்கஸ்

(பிப்ரவரி 19, 1473 - மே 24, 1543)



நிக்கோலாஸ் கோப்பர்னிக்கஸ் போலந்து நாட்டின் ராயல் புருசியாவில் தோர்ன் என்ற நகரில் 1473 பிப்ரவரி 19ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை கிராக்கொவ் நகரில் பெரிய வணிகர் ஆவார். தாயார் பார்பரா வாட்சன்ராட் தோர்ன், நகரின் மிகப்பெரிய செல்வந்தரின் மகள். இத்தம்பதிகளுக்கு நான்காவது மகனாகப் பிறந்தவர் நிக்கோலாஸ். இவரது தந்தை கிராக்கொவ் நகரிலிருந்து தோர்ன் நகருக்கு இடம்பெயர்ந்து அங்கு ஒரு மரியாதைக்குரிய குடிமகனாக இருந்தார். செம்பு வியாபாரம் செய்து செல்வந்த வணிகராகத் திகழ்ந்த இவர், நிக்கோலாசுக்குப் பத்து வயதாகும்போது காலமானார். இவரது தாயார் பார்பரா வாட்சன் ராட் பற்றி அதிகம் அறியக் கிடைக்கவில்லை. எனினும், கணவருக்கு முன்னரே இவர் இறந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. தந்தையாரின் மறைவுக்குப் பின்னர், நிக்கோலாசும் அவரது மூன்று உடன்பிறப்புக்களும் (ஒரு சகோதரன், இரண்டு சகோதரிகள்) அவர்களது தாய்மாமனொருவரால் வளர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. இறுதிவரை இவர் திருமணமே செய்யாது தனது ஆய்விலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தார். இலத்தீன், இடாய்ச்சு, போலந்து, இத்தாலியம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் இவர் தேர்ச்சி பெற்றிருந்தார்.

1491இல் கோப்பர்னிக்கஸ் கிராக்கோவ் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றார். இங்கேதான் இவரது ஆசிரியராக இருந்த அல்பேர்ட் புருட்செவ்ஸ்கி என்பவரின் உதவியால் அவருக்கு வானியலில் ஆர்வம் ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், மேலும் சில காலம் தோர்னில் தங்கியிருந்து பின் இத்தாலிக்குச் சென்று அங்குள்ள பொலொக்னாப் பல்கலைக் கழகத்தில் சட்டம் பயின்றார். அவரது கல்விக்குப் பண உதவி புரிந்த அவரது மாமனார், கோப்பர்னிக்கஸ் ஒரு பேராயராகவும் வரவேண்டுமென விரும்பினார். அங்கே படித்துக் கொண்டிருந்தபோது, பிரபல வானியலாளராக இருந்த ஆசிரியர் டொமெனிக்கோ மரியா நோவரா டா பெராராவைச் சந்தித்தார். கோப்பர்னிக்கஸ் அவரிடம் படித்ததோடு அவருடைய சீடராகவும், உதவியாளராகவும் ஆனார்.

கோப்பர்னிக்கசின் சூரிய மையக் கொள்கை எளிமையானது. எனினும் கிரேக்கர்களுடைய சிந்தனைகளின் தாக்கம் இவருடைய கொள்கையிலும் இருந்தது. கோப்பர்னிக்கஸ் கொள்கையின் படி கோள்களின் பெரிய வட்டமும், சிறிய வட்டப்பரிதிகளும் சூரியனை மையமாகக் கொண்டவை. கோள்களின் பின்னோக்கிய நகர்வையும் அவற்றின் ஒளி வேறுபாடுகளையும் விளக்கச் சிறிய வட்டப் பரிதிகளையும் தனது கொள்கையில் புகுத்தியிருந்தார். அது மட்டுமின்றி விண்மீன்கள் வெகுதொலைவில் வானக் கூரையில் அமைந்திருப்பதாகவும் இவர் குறிப்பிட்டார்.

கோப்பர்நிக்கசின் கருத்து அக்காலப் பொது மக்களாலும் வானியலாளர்களாலும் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படவில்லை "புவி பேரண்டத்தின் மையமல்ல. சூரியனைச் சுற்றும் கோள்கள் போலப் புவியும் ஒரு சாதரணக் கோள் தான்" என்பதை மதவாதிகளும் வானவியலாளர்களும் ஏற்கவில்லை. மேலும் அவரது நூலான 'ஆன் தி ரிவலூஷன்ஸ் ஆ.்ப் தி ஹெவென்லி பாடீஸ்' (On The Revolutions of The Heavenly Bodies) இலத்தீன் மொழியில் இருந்ததால், பெரும்பாலான மக்களால் அதனைப் படித்துணர முடியவில்லை. இதனால் இவரது நூல் பெருமையடையாமலே இருந்தது. இத்தாலிய வானியல் அறிஞர்களான கலிலியோ கலிலி (கி. பி. 1564-1642) புருனோ போன்றோர் கோப்பர்நிக்கசின் கொள்கைகளை ஏற்று அதனை நிறுவும் முயற்சியில் இறங்கியவுடன் தான் உலகின் பார்வை கோப்பர்நிக்கசின் நூல்மேல் விழுந்தது. அதில் உள்ள ......

– தொடர்ச்சி 25ம் பக். .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பிழந்த சிற்பிகள்....

|| டெனிஸ்டன்



பிரசவ மங்கையின் அலறலில்
பிறக்குமெம் சுதந்திரமென்றே
விடியல் தோறும் விடியாத வானை
வெறித்துப் பார்த்தே வெறுத்துப்போன மனுச சாதிக்கு
விடிவெள்ளி கண்ட கண்ணெல்லாம் ஆறுமுன்னமே
அடிவான கடல் பரப்பில்
அம்மை வயிறு கிழித்து
கொப்பழித்த குருதியில் கடல் சிவக்க
ஆதவனாய் ஆண்டவன் முகம் காட்டுகிறான்...

நடுமதிய சூரியனாய் தங்க நிறத் தாரகையாய்
வந்தவன் வைக்கோலில் மின்னியதோ
இன்றெலாம் காணும் சூரியன்
வைக்கோல் வண்ணமதாய் மின்னுவதோ...

ஏரோது ஏவியுரைத்த படி கத்தி முனையில்
கத்திமாண்ட பிஞ்சு பாலகருள் நொந்த வயிற்றோடு
கொண்டு மறைத்த சேதியுரைத்திடவா
கொஞ்ச நேரமேனும் வெஞ்சின சூரியன் வெயிலை
வென்மேகம் மறைத்துப் போகுதோ...

பெத்தலையில் பெத்தவளை எகிப்தோடு ஏற்றிச்சுமந்து
கொண்டோடி மறைத்த கதை சொல்லவோ
கிழக்கோடு உதிர்த்து
மேற்காய் ஓடி ஒழிந்து
மறைந்தொழிந்து வாழுதோ வான சூரியன்.

பகலவனை படைத்தவனை பகலவன்
நாள்தோறும் பறைசாற்றிடும் சேதியாம்
அறியாதே பகற்கனவு காண்கிறோம்...

அன்னை அடிவயிறு கிழித்து கொடுத்த
விடியலில் அடையாளம் சூடிக்கொண்டே
அவள் கருவறை மேல் கால்வைத்தேறி நின்றா
கடவுளை தூக்கிக் கொஞ்சுவது ...?

கிறிஸ்தவனே கிறிஸ்தவளே நத்தாரும் நல்வருடப்பிறப்
வருதென்று குதித்து கொண்டாடும் நீவீர்
நத்தார் ஒரு கன்னியின் பிரசவ வலிக்கண்ணீர்
புதுவருடம் இந்த வருடத்தின் இறப்பு ....

மகிழும் தருணம் மட்டுமே மனதறிந்த மானுடனே
என்றும் மகிழ்வை கொடுக்க மரணம் சுமக்கும்
மகத்துவங்களை மதிக்கவோ துதிக்கவோ மறவாதே...



இலங்கை மின்சார சபை (CEB) இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டு பகுதியில் பாரிய வருமானத்தை ஈட்டி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டில் மின்சார கட்டணங்கள் குறைக்கப்பட்ட நிலையிலும் இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான மூன்றாம் காலாண்டு பகுதியில் இலங்கை மின்சார சபை 126.8 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது.


## இலங்கை மின்சார சபை




– தமிழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடதாசிகள்

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.



"ஏன் மகள் அங்கலாய்க்கிறீங்க... எப்படியும் நியமனக்கடிதம் வருந்தானே...."

'ஆமா...' என்று சொன்னாலும் மனம் கேட்காமல் ஒன்லைனில் பார்ப்பதும் நண்பர்களிடம் விசாரிப்பதுமாக மகள் குட்டிபோட்ட பூனையாட்டம் அங்கலாய்ப்பது ஜெயராணிக்குப் புரிகின்றது.

"அம்மா எனக்கு மாகாண சபையில் பெயர் வந்திருக்கிறது..."

"ஏன்... மெறிற் பாஸென்றால் நஷனல் ஸ்கூலிலதான் நியமனம் என்றும் மத்திய அரசின் பெயரிலதானே பெயர் வரவேணும்...."

"அதுதானம்மா எனக்கு யோசனையாய் இருக்கு...."

"என்ன செய்யலாம்.... எதற்கும் எங்களுக்குத் தெரிந்த டிறக்டர் ஒருவர் இருக்கிறார்.... அவரிடம் கேட்போமே..." அவரிடம் கேட்கும்படி மகள் தூண்டுகிறாள்.

அவருடைய நம்பரில் தொடர்பை ஏற்படுத்துகிறாள் ஜெயராணி.

"ஓகே நான் நாளைக்கு விசாரிச்சுச் சொல்கிறேன்..." என்று அவர் சொன்னதன் பின் மகளின் நச்சரிப்புக் குறைந்து இருவரும் நிம்மதியாய்த் தூங்கினர்.

அடுத்த நாள் முதல் வேலையாக டிறக்டருக்கு எடுக்க வேண்டும் என நினைத்துக்கொண்டிருந்தவளுக்கு அவரே தொடர்பை ஏற்படுத்தியது நல்ல சகுனமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுங்க சேர் ...." என்று பவ்வியமாகக் கேட்கிறாள்.

"உண்மை தான் இந்த முறை மெறிற் எடுத்தவர்களுக்கும் மாகாண சபைதான் நியமனம் கொடுக்கிறாங்க...."

அவளின் மௌனம் தனக்கு சாதகமாக அமைந்ததில் அவருக்கு மகிழ்ச்சி.

"மாகாண சபை பெயர்ப் பட்டியலில் பெயரைப் பார்த்தேன்.... சரியான தூரத்தில் கொஞ்சம் கஷ்ரப் பிரதேச பாடசாலை ஒன்றைப் போட்டிருக்கிறாங்க..."

"ஐயோ... என்ன சேர்.... மெறிற் பாஸ் எடுத்தனான், எனக்கு நஷனல் ஸ்கூல்தான் கிடைக்குமென நினைத்தவளுக்கு இது பெரிய ஏமாற்றமாக இருக்கப் போகிறதே..." என்று கூறி ஜெயராணி தன் கவலையை வெளிப்படுத்துகிறாள்.

கொஞ்ச நேரம் தாமதித்து...

"ஆனா இதுக்கும் ஒரு வழி இருக்கு..."

"என்ன சேர்.... என்ன வழி...?" ஜெயராணியின் அங்கலாய்ப்பைத் தெரிந்து கொண்ட டிறக்டர்,

"நான் சொல்றதைக் கவனமாகக் கேளுங்கள்.... இதை யாருக்கும் சொல்ல வேண்டாம்...."

"இல்லை சேர்.... நான் ஒருத்தருக்கும் வாய் திறக்க மாட்டேன்...."

"என்ன... பிறகு வேறையாக்களும் வந்து ஒரே கரைச்சலாயிருக்கும்...."

"இல்லையில்லை... நான் மூச்சு விடமாட்டன்..."

"நான் உங்கள் வீட்டுக்குக் கிட்ட உள்ள ஸ்கூல் ஒன்றை எங்கட பெரியவரைக்கொண்டு போட்டுத்தாறன்.... ஆனா..."

"சொல்லுங்க சேர்... ஏதாவது கொடுக்கணுமா...?"

"ஆமா... ஒரு லச்சம் அவருக்குக் கொடுக்கணும்....."

ஜெயராணி தனியே முடிவெடுக்க முடியாமல் யோசிக்க...

"எதற்கும் யோசிச்சுச் சொல்லுங்கோ..."

ஜெயராணி இடிவிழுந்தவள் போலானாள்... மகளின் தூரப் பாடசாலை, உதவியில்லா நிலை, ஞாயிறு போய் வெள்ளி இரவு வீட்டிற்கு வந்து சேரும் நிலை, அல்லது தான் உதவிக்குப் போய் நிற்க வீட்டின் நிலை... எவ்வளவோ யோசனைகள்...

மகளிடம் சொல்வதை விட கணவனிடம் சொல்வதுதான் சரி என நினைத்தவளாய் அவனுக்குத் தெரிவிக்கிறாள்.

"ஏன் உன்னோடு படித்தவளொருத்தி... தனுஷாவோ தர்சினியோ யாரோ இப்ப எடுயுக்கேஷன் டிப்பாட்மென்ரில வேலை செய்யிறாள் என்று சொன்னாயே... எதற்கும் அவளோட ஒருக்கா கதையுமன்..."

"ஆமாப்பா... தர்சினி வேலை செய்கிறாள்... ஆனா கிளாக்காகத்தான் இருக்கிறாள்"

"பரவாயில்லை.... எதற்கும் அவளிடம் சொல்லன்...."

தர்சினியோடு தொடர்பை ஏற்படுத்தி விசயத்தைச் சொல்ல....

"உனக்கென்ன பயித்தியமா... ஒருலச்சம் கொடுக்க. நான் பார்த்துச் சொல்கிறேன்..." என்று கூறுகிறாள்.

சற்று நேரத்தில் தர்சினி போன் எடுக்கிறாள்...

"பாத்தியா..." என்று ஆவலோடு ஜெயராணி கேட்கிறாள்.

"ஆமாடி, பாத்தன்.... அவளுக்கு உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில்தான் நியமனம் போட்டிருக்கு...."

"உண்மையாடி...?"

"ஆமாடி... பாத்தியா இப்ப ஒருலச்சம் அநியாயமாக கொடுத்திருப்பாயே...."


"தங்ஸ்ஸடி தங்ஸ்.... நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “போக்கட் மீட்டிங்”

**கடுகுக்கதை - 137**



- பற்றி

சுப்பையா அண்ணன் தேர்தல் பிரச்சாரத்தில் தனது ஊரில் உள்ள எல்லா வேட்பாளர்களின் கூட்டங்களிற்கும் செல்வார். முன்னைய காலங்கள் மாதிரி பெரிய பெரிய மைதானங்களில் கூட்டங்கள் எதுவும் இப்போது நடப்பதில்லை. “பொக்கட் மீட்டிங்” என்ற பெயரில் வீடுகளில் பத்துப்பேருடன் கூட்டம் எல்லாம் “மினி” ஆகிவிட்டன.

நிறையக் கட்சிகள், எக்கச்சக்க சுயேட்சைக் குழுக்கள். 5 எம்பிக்கள் என்றால் ஐயாயிரம் வேட்பாளர்கள்.

அன்ரன், சுப்பையா அண்ணனை சந்தைக்குள் சந்தித்தார்.

“சுப்பு அண்ணய்! என்ன எல்லா கூட்டங்களுக்கும் போறீங்களாம். அது நல்ல பழக்கம்தான்... எல்லாரின் கருத்துக்களையும் கேட்கலாம் தானே....” என்று அன்ரன் சொன்னார்.

சுப்பையா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அன்ரனின் காதில் குசுகுசுத்தார்.

“நான் கருத்துக் கேட்கப் போகவில்லை.. எல்லாருக்கும் என்ட முகத்தக் காட்டணும் எண்டுதான் போனனான்.

வீட்ல பட்டத்தை எடுத்துட்டு மகனும், மகளும் வேலையில்லாமல் இருக்குதுகள். அதுகல நல்ல ‘ஜொப்’புக்குள்ள போடனுமல்லவா” என்றார் சுப்பையா அண்ணன்.

ஒருவாரம் ஓடிவிட்டது. பாரளுமன்ற தேர்தலும் முடிந்துவிட்டது. சுப்பையா அண்ணன் சென்ற வேட்பாளர் எவரும் வெற்றிபெறவில்லை.... அவர்களின் சில கட்சிகள் வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அவர்கள் தெரிவு செய்யப்பட வில்லை.

இப்ப சுப்பு அண்ணன் என்னசெய்யப் போகிறார்...? என்று அன்ரன் குழம்பி நின்றார்.

அப்புறமொருநாளைக்கு வீட்டுப் பக்கம் வாறன்டி. தங்ஸ்ஸடி....”

“சரி, சரி... நான் சொன்னதாக யாரிடமும் சொல்லாதே.... பிறகு என்ரை வேலைக்கு ஆப்பு வச்சிடுவாங்க....”


“இல்லையடி.... நான் சொல்லமாட்டன். நீ பயப்படாதே.....”

தொடர்பைத் துண்டித்தவளுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.... ஆனாலும் மகளின் கைக்கு நியமனக்கடிதம் வந்து அவள் டியூட்டி அஸூம் பண்ணட்டும். இவருக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைக்கிறாள்.

தெரிந்தவன் என்று உதவி கேட்க எப்படி உழைக்கப் பாக்கிறான்.... சீ... இவனெல்லாம் படித்து பெரிய டிறைக்ரர் என்று திரியிறானே. இவனா எங்கட கல்வியை முன்னேற்றப் போகிறான் என்று தீராத கோபத்தோடு நினைக்கிறாள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில்
## போதுக்கல்வியும் அறிவுப் பொருளாதாரமும்

A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I

அறிவைப் படைத்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் அதைப் பரிமாற்றம் செய்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரமே, அறிவுப்பொருளாதாரம் என வரையறை செய்யப்படுகின்றது.

உயர் பெறுமதிவாய்ந்த வருவாயைப் பெறும் பொருட்டு (USS) கல்விசார், புத்தாக்க புலமைசார் வினை பலன்களை மற்றும் சேவைகளை ஓர் ஏற்றுமதிப் பண்டமாக உற்பத்தி செய்யமுடியும். இதன் காரணமாக அண்மைக் காலங்களில், இலங்கையிலும் "அறிவு உற்பத்தித்திறன் வாய்ந்த சொத்து" என்ற சிந்தனை தொடர்பாக அதிக கரிசனை ஏற்பட்டுள்ளது.

அறிவுப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாத, ஒரு தொகுதி பல்வகைத் திறன்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையான,

1. அடிப்படைத்திறன்கள்
2. பயன் நிறைவான தொடர்பாடல்
3. சிந்திக்கும் திறன்கள்
4. குழுச்செயற்பாடு
5. தகவல் பற்றிய அறிவு
6. தொடர்ந்து கற்கும் பழக்கம் என்பனவாகும்.

இவற்றுள் முதலில் இடம்பெற்றுள்ள அடிப்படைத் திறன்களில் வாசித்தல், எழுதுதல், கணித்தல் மற்றும் அடிப்படை கணினிப் பிரயோகங்களைச் செயற்படுத்தல் இடம்பெறுகின்றன. பயன்நிறைவான தொடர்பாடலின் கீழ் பேரம் பேசுதல், இணங்கவைத்தல், துணை புரிதல், பயிற்சியளித்தல், அறிவுரையும் துணையாதரவும் வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக வாய்மொழி எழுத்து மற்றும் கருத்துக்களை முன்வைக்கும் திறன்களை உபயோகித்தல் உள்ளடங்குகின்றன.

மேலும் சிந்திக்கும் திறன்களில் சிந்தித்தல், பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்தலும், சூழ்நிலைகளை மதிப்பீடு செய்தலும், பிரயோகித்தலும் இடம்பெறுகின்றன.

ஏனையோருடன் ஒத்துழைத்தல், மற்றும் குழுவாகப் பணியாற்றுதல் என்பன குழுச் செயற்பாட்டுத் திறன்களில் கீழும் தகவல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் சரியான இடத்தினைக் கண்டுபிடித்தல், சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், ஒழுங்கு படுத்துதல் போன்ற திறன்கள் தகவல்கள் பற்றிய அறிவு என்பதன் கீழ் இடம்பெறும் அதேவேளை தொடர்ந்து கற்கும் பழக்கம் என்பதன் கீழ் பல்வேறுபட்ட சூழ்நிலைகளுக்கும் இசைவாக்கமடைதல், ஆபத்துக்களை எதிர் கொள்ளுதல், தொலைநோக்கை வகுத்தலும், அதற்காகப் போராடுதலும், சுயேச்சையாகக் கற்றல், பொறுப்பேற்றல், புதிது புனைதல் (அறிவை உருவாக்குதலும் பயன்படுத்தலும்) என்பன இடம்பெற்றுள்ளன.

இந்தவகையில் இலங்கையில் அறிவுப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாத மேற்படி திறன்களை மையப்படுத்திய பொதுக்கல்வி முறைமையும் உற்பத்தித்திறனை மேம்படுத்த உதவும் பாடசாலை கலைத்திட்டத்தையும் செயற் படுத்தும் முயற்சிகள் பல வருடங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறா யினும் பொருளாதார வளர்ச்சியை நீண்ட காலத் திற்கு நிலைத்திருக்க செய்வதற்கு அவசியமான பின்வரும் மூன்று காரணிகளை அதிகரிக்க போதுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதே பொருளியலாளர்களின் கருத்தாகும்.

**1. மூலதனத்தை விரிவுபடுத்தல்**

இதனால் கருதப்படுவது மூலதனத்தின் அளவை அதிகரிப்பதாகும். முன்னர் பயன் படுத்திய சாதனங்களை விடவும் அதிகளவு உற்பத்தி திறன் வாய்ந்த சாதனங்களைப் பயன் படுத்த வேண்டும் என்பதாகும்.

**2. உயர்தரம் வாய்ந்த ஊழியப்படை**

அதிகளவு உற்பத்தி திறன் (Productive) வாய்ந்த அதிகளவு அறிவாற்றலுடைய ஊழியப் படை காணப்படல்.

**3. தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கம்**

உருவாக்குதல் - பகிர்வு – புதிய அறிவாற்ற லின் பயன்பாடு

எனவே அபிவிருத்தியில், அறிவைப் படைப்ப தற்கும் அதைப் பயன்படுத்துவதற்குமான ஆற்றல் பிரதானமான ஒரு காரணியாக மாறி யுள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கை பொதுக்கல்வி முறையில் பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களில் 97 சதவீதத்திற்கும் அதிகமானோர் ஆரம்பப் பாடசாலைகளில் சேர்வதாலும் 89 சதவீதமானோர் ஆறாம் தரம் அல்லது கனிஸ்ட இடைநிலைவரை கற்பதாலும், இலங்கையில் ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வி பரவலான வளர்ச்சியைக் கண்டுள்ளது. 82 சதவீதத்தினர் கட்டயாக்கல்வி கல்வி கற்க வேண்டிய காலமாகிய ஒன்பது வருடங்களைப் பூர்த்திசெய்வதுடன் கல்விப்பொதுத்தராதர சான்றிதழ் பரீட்சைக்கு உடன் தோற்றுகின்றனர். ஆதலால் அறிவுப்பொருளாதாரத்திற்கு ஆதார மானவற்றிக்கு துணையாக இந்த ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி முறைமையை பழக்கப்படுத்திக்கொள்ளுதல் அவசியமானதா கும்.

எவ்வாறாயினும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படுகின்ற திறன்களுக்கும் தொழில்தலங்களின் தேவைக ளுக்குமிடையே பொருத்தப்பாடின்மை காணப் படுகின்றது என்பதே கல்வியைப் பற்றிய பொதுவான விமர்சனமாக உள்ளது. எனவே விரைந்து நாம் தீர்க்கவேண்டிய பிரச்சினை களில் ஒன்றாக தொழில் உலகுடன் (World Of Work) கல்விக்குள்ள பொருத்தப்பாட்டின் குறைபாடு, அல்லது கல்வியின் வெளிவாரிச்செயற்றிறன் உள்ளது. முறைசார் பொதுக்கல்வியானது அதிகளவு தொழிநுட்பப்பாடங்கள் சார்ந்ததாகவும் கூடியளவு சந்தை நலன் கருதியதாகவும், கூடியளவு வெளிவாரிச் செயற்றிறன் கொண்ட தாகவும், அறிவாற்றல் இயக்கப்படுகின்ற பொருளாதாரம் ஒன்றிக்கான நன்கு பயிற்றப்பட்ட ஊழியப்படையைத் தயார் செய்வதற்கான வசதிகளைக் கொண்டதாகவும் திகழ வேண்டும்.

***(நன்றி – 'பொருளியல் நோக்கு' ஆவணி - புரட்டாதி -2010, மத்திய வங்கி அறிக்கை - 2020)***

"அயர்ந்து விடாதீர்கள். வெற்றிப்படிகளுக்கு இன்னும் சிறிது தூரம்தான் இருக்கிறது"

– ரூதர்ஃபோர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி



## "நீ ஒரு தனிப்பிறவி"

■ ஆழியோன்




ஏ.பி.ஜே அப்துல் கலாம் எழுதிய "நீ ஒரு தனிப்பிறவி" என்ற நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் முதலாம் பக்கதிதில் புத்தகத்தின் தலைப்பின் கீழ் பின்வரும் வசனங்களைப் பொறித்துள்ளனர்.

"உங்கள் எண்ணங்களும் செயல்களும் உங்களை பெரும் உயரத்திற்கு இட்டுச் செல்லும்"

இதன் முதற்பதிப்பு 2013இல் வெளிவந்தது. எனக்குக் கிடைத்தது 2020இல் வெளிவந்த மூன்றாம் பதிப்பு.

அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தொலை பேசியைக் கண்டுபிடித்தார். அதற்காக அவர் என்ன முயற்சி செய்தாரோ, என்ன வழிமுறைகளை கையாண்டாரோ அவற்றை இன்றைய இளைஞர்களும் கடைப் பிடிக்க வேண்டுமென 'கலாம்' விரும்புகிறார். உங்களைச் சுற்றி இந்த கோடான கோடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் உளுத்துப் போன அதே சராசரி வாழ்க்கையை வாழ வேண்டாம். காலங்காலமாக அவர்கள் சென்றுகொண்டிருக்கும் பாதையில் உழல வேண்டாம். அவ்வப்போது அந்த பழக்கப்பட்ட பழம்பாதையை உதறித் தள்ளுங்கள். அதைச் செய்து புதுமை நாடிச் செல்லும்போது இதுவரை பார்த்திராத ஒன்றை நிச்சயமாகக் காண ஆரம்பிப்பீர்கள். அது வெகு அல்பமான சிறு பொருளாக இருக்கும். ஆனால் அதை நீங்கள் உதாசீனம் செய்யாதீர்கள். மென்மேலும் ஆராய்ந்து கொண்டுபோகவும், அதைச்சுற்றி இருப்பனவற்றை எல்லாம் கூர்மையாக ஆராய்ந்து நோக்கவும் ஒரு கண்டுபிடிப்பே இன்னொன்றுக்கு வழிகாட்டும். அதைப்பற்றி உங்களுக்கு முழுப் பிரக்ஞை உண்டாகும் முன் ஏதோ ஒன்று உங்கள் சிந்தனையைக் கிளறிவிட்டிருக்கும்.

- அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல்

முன்னைய நிகழ்வு ஒன்றைப்பற்றி அப்துல் கலாம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"ஜப்பானில இருந்து கனடாவிற்குப் பயணித்துக் கொண்டிருந்த ஒரு கப்பலில் நடந்த சம்பவம் எனக்கு நினைவுக்கு வந்தது. இது நடந்தது 1893ம் வருடமாகும். அப்பொழுது இந்தியா பிரிட்டன் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்தக்கப்பலில் இருபெரும் இந்தியர்கள் பயணித்துக்கொண்டிருந்தனர். ஒருவர் சுவாமி விவேகானந்தர். மற்றவர் நுஸ்ஸாவான்ஜீ டாட்டா. டாட்டாவின் பயணம் பற்றி சுவாமி விவேகானந்தர் வினவினார். "நான் நாட்டில் எப்படியாவது உருக்காலைகளை நிறுவவேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய முனைந்து அதற்காகப் பயணித்துக் கொண்டிருக்கின்றேன்" என்றார் டாட்டா.

நுஸ்ஸாவான்ஜீ டாட்டாவுக்கு இங்கிலாந்தில் இருந்து அந்தத் தொழில்நுட்பத்தை இந்தியாவிற்கு கொண்டுவர முடியவில்லை. டாட்டா அவர்கள் இங்கிலாந்து சென்று சம்பந்தப்பட்ட தொழில் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். எப்படி உருக்கால் ஆன பொருட்களை உற்பத்தி செய்வது என்பதைப்பற்றி பேசினார். தம்மிடம் அதற்கான வசதிகள் இருப்பதாக அவர்களிடம் எடுத்துச் சொன்னார். பிரிட்டிஷ் தொழில் அதிபர்கள் அவரைக் கிண்டல் செய்தனர். "அப்படி இந்தியர்களால் உருக்கால் ஆன பொருட்களை உருவாக்க முடிந்தால் நாங்கள் அவற்றைக் கடித்துத் தின்போம்" என்று கேலி செய்தனர்.

உறுதிபடைத்த டாட்டா மனம் தளரவில்லை. அட்லாந்திக் மகா சமுத்திரத்தை கடந்து கப்பலில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அமெரிக்காவிலிருந்து உருக்குத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை வரைபடங்களுடன் கொண்டுவந்துவிட்டார்.

ஜாம்செட்பூரில் (தற்போது ஜார்க்கண்ட்) நிறுவப்பட்ட டாட்டா நிறுவனம் ஏறக்குறைய ஐம்பது இலட்சம் தொன் உருக்கை உற்பத்தி செய்கின்றது. கப்பலில் வைத்து சுவாமி விவேகானந்தர் கூறிய சிறு ஆலோசனைப்படி உண்டாக்கப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில் நுணுக்கங்களைக் கற்பதற்கு பெங்களூரில் நிறுவப்பட்ட The Indian Institute of Science என்ற நிறுவனம் இன்று பிரமாண்டமானதாக வளர்ச்சியடைந்துள்ளது.

நுஸ்ஸாவான்ஜீ டாட்டா அவர்கள் இத் திட்டங்கள் செயற்படுத்தத் தொடங்கவதற்கு முன்பே 1904 இல் காலமாகிவிட்டார். எனினும் திட்டங்கள் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. (இவற்றை தொண்டனின் இலக்கிய மஞ்சரிக்காக எழுதிக்கொண்டிருக்கும்போது நுஸ்ஸாவான்ஜீ டாட்டா அவர்களின் வழித்தோன்றல் ரத்தன் டாட்டா அவர்களும் எண்பத்தாறு வயதில் மறைந்து விட்டார்). ரத்தன் டாட்டா அவர்கள் கோடி கோடியாக பணம் சம்பாத்தியம் செய்தாலும் அவற்றை இந்தியாவின் பாமர மக்களுக்காக செலவு செய்தார். சராசரி இந்தியன் ஒருவர் கார் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக டாட்டா நானோ கார் ஒன்றையும் உற்பத்தி செய்தார். அதன் விலை இந்தியன் ரூபாவில் ஒரு இலட்சமாக இருந்தது)

இப்புத்தகத்தின் இறுதிப்பகுதியில் பின்வருமாறு கலாம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

"இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் எடுத்துச் சொல்ல நான் ஒரு செய்தியை வைத்திருக்கிறேன். இனி புத்தகங்களே உங்களுடன் கூட இருக்கும் பொருட்களாக இருக்கட்டும். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக புத்தகங்களே என் தோழர்களாக இருந்து வந்திருக்கின்றன. அவைகளே என் கனவுகளைத் தூண்டி இருக்கின்றன. அந்தக் கனவுகளே பெரும் இயக்கங்களாக ஆகி இருக்கின்றன. எனக்கு நல்ல புத்தகங்கள் யாவும் தேவதைகள் போல் இருந்தன. தோல்விகள் என்னை வந்து தாக்கியபொழுது அவை எனக்கு தைரியத்தைக் கொடுத்தன. வெற்றிகள் கிடைத்த பொழுது அவை என் இதயத்தை மெல்ல வருடி இதமளித்தன.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.

**நாகமணி இருதயநாதன்**

(துரைசிங்கம்)

**மண்ணில்** 1942.08.14

**விண்ணில்** 2023.12.18

ஆண்டு ஒன்று சென்றாலும்
எங்கள் மனதை விட்டு என்றும்
நீங்காத நினைவால்
அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்திற்கு உறைவிடமாய்
இரக்கத்தின் ஊற்றாய்
நம் வாழ்வில் பயணித்த நம் அன்புத் தந்தைக்கு
உம் விண்ணக வீட்டில் முடிவில்லா வாழ்வை
அளித்திட வேண்டுமென்றும் மன்றாடுகின்றோம்.


உன் பிரிவால் துயரும்.....
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
**குடும்பத்தினர்,**
புனித அருளானந்தர் வீதி,
பெரிய கல்லாறு – 01.


ஆகவே என் இளைய நண்பர்களே புத்தகங்களே இனி உங்கள் தோழர்களாக இருக்கட்டும் அவை உங்களுடைய அளப்பரிய நண்பர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நூற்றைம்பது ரூபா

சிறுகதை


பைந்தமிழ்க்குமரன் ஜெ.டேவிட்




சில சம்பவங்கள், நிகழ்வுகள், காட்சிகள், சில குரல்களையும் கூட கடந்து வர முடிவதில்லை. அவை உள்ளத்தின் ஆழத்தில் இறங்கி ஏதோ செய்கின்றன. அது ஒரு நரக வேதனையாக மாறிப்போகின்றது. ஏன்...? ஏன்...? எனும் வினாக்களும்கூட விடை தெரியாமல் கரைந்து போகின்றன.

ஓங்கி உயர்ந்த மாடி வீடு. நான் மட்டும் தன்னந் தனியனாய் உலவுகிறேன். மகன் பல்கலைக்கழகத்தில். மனைவியும் மகளும் யூதா ததேயுவைச் சந்தித்துவிட்டு வர சென்றுவிட்டனர். "இஞ்சி, தக்காளி சின்னவெங்காயம் கூடவே கோழி இறைச்சியும் வாங்கி வையுங்கப்பா" மனைவியின் குரல் நினைவுக்கு ரிபன் வெட்டவே வீட்டைப் பூட்டிவிட்டு புறப்படுகின்றேன்....

பல நாட்களாகப் பூட்டிக்கிடந்த சுபேசின் கராஜ் திறந்து வேலை நடக்கிறது. பாடசாலையோரத்து சாப்பாட்டுக்கடை ஒற்றைக்கதவு விலக சாம்பிராணித் தட்டுடன் ஒருத்தி வந்து அங்குமிங்குமாக புகைமூட்டத்தைப் பரப்புகிறாள். பின்னால் வெளிப்பட்ட அவளின் கணவன் பழைய தோசைகளைத் துண்டுகளாகப் பிய்த்து காகங்களுக்குப் போட்டு புண்ணியம் தேடுகின்றான். காகங்களுக்கு வாந்திபேதி வந்து ஏரியா முழுவதையும் நாறடிக்கப்போகுதுகள். பிள்ளையார் கோயில் ஒலிபெருக்கியில் ரி.எம்.எஸ் பாடிக்கொண்டிருக்கிறார்.ஆட்டிறைச்சிக்கடை, திரையரங்கு, தாளவெட்டுவான் சந்தி கடந்து எதிரே சிக்னலில் பைக்கின் வேகம் குறைந்து தணிந்து கால்களை தரையில் ஊன்றி இடமும் வலமுமாக கண்களை வீசுகின்றேன்.

வலப்புறமாக ஒரு தம்பதியினர். அவனது கண்கள் எப்போ சிவப்பு லைற் மஞ்சலாக மாறும் என்று பார்த்தபடியே அக்சிலேட்டரை முறுக்கியபடி நிற்கிறான். அவன் தோளில் கை வைத்தபடி அமர்ந்திருக்கும் இளவயதுக்காரி கடைக்கண் பார்வையால் வலை வீசுகின்றாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புருஷனுக்குப் பின்னால் இருந்து கொண்டு இவளுகள்... ச்சே....' மனம் எண்ணவும், இடமாக தலையை திருப்பினால் தாடிக்காரன் ஒருத்தன் ஏதோ அவசரத்தில் வந்தவன் போல துடித்துக்கொண்டு நிற்கிறான்.

பின்னால் சில ஓட்டோக்கள், கார், பட்டா, டிப்பர், பஸ் என்று தொடர்கின்றது. சிக்னல் இலக்கம் எட்டு ஏழாகி ஆறாவது விழும்போது அந்தக் குரல் காதில் விழுகிறது.

"வஸ்சுக்கு காசில்ல மனே... ஓம் மனே... ஆசுவத்திரிக்கி மருந்தெடுக்க வந்தனான். இந்த சீலத் தலப்புலதான் காச முடிஞ்சி வெச்சிருந்தன். இப்ப காணல்ல மனே... ஊட்ட போக வஸ்சுக்கு காசில்ல மனே..." எழுபது வயதை தாண்டியவள் பஞ்சுப்பொதிபோல் நரைத்த தலை. பழையதோர் கைத்தறிப் புடவையில் தாயொருத்தி கைகளை நீட்டுகிறாள். திரும்பத் திரும்ப "வஸ்சுக்கு காசில்ல மனே.... வஸ்சுக்கு காசில்ல மனே...." என்று கெஞ்சுகிறாள். அவளுக்கு ஒரு நூறு ரூபாயைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். நான்கு மூன்றாகி இரண்டாகி ஒன்று விழுந்ததும் மஞ்சளும் தொடர்ந்து பச்சையும் எரிய வாகன ஹோண் ஒலிகள் என்னைத் துரத்த கையை முறுக்கி விட்டேன்.

மனம் பதை பதைக்கிறது. அந்தத் தாய்க்கு உதவி செய்ய முடியாமல் போனதே எனும் தவிப்பு. அவள் இடது புறமாக வாகை மரத்தடியில் அல்லவா நின்றாள். நான் நெரிசலுக்குள் காலூன்றியபடி, இரையும் மோட்ட சைக்கிளில் இருந்தேனே. இறங்கவோ நிறுத்தவோ கணமேனும் வழியில்லை. 'சரி.. சரி.. எப்பிடியும் இருபது முப்பது நிமிசத்தில கறி ஏதும் வாங்கிக் கொண்டு திரும்பி இதால வரும்போது அந்தப் பக்கமா மோட்ட சைக்கில நிப்பாட்டிப்போட்டு இங்கால வந்து நூறு ரூபாயாச்சும் கட்டாயமாக குடுக்க வேணும்....' மனதில் உறுதி கொண்டாலும் அந்தத் தாயின் கெஞ்சல் திரும்பத் திரும்ப காதில் கேட்கிறது. மரக்கறிகள் உச்சவிலை. மீன் அதைவிட உயர்வாக. என்ன செய்வது? கோழி இறைச்சியும் கரட் அரைகிலோ, கட்டாப்பாறை கருவாடு ஐநூறு ரூபாவுக்கும் வாங்கும்போதே கண்கள் நிதானிக்கின்றன.

மோட்டபைக் பாக்கிங் காசு ஐம்பது ரூபாவையும் அந்தத் தாய்க்கு கொடுக்கவென நூறு ரூபாவையும் ஒதுக்கி வைத்துக் கொள்கிறேன். மீதியைப் பார்த்து தக்காளியும் இஞ்சியும் வாங்கியபடி கால்கள் நடக்கின்றன.


பாக்கிங் காசு வாங்கும் தடியன் எனது மோட்டபைக் கெண்டிலைப்பிடித்தபடி கைபேசிக்கு முத்தம் கொடுக்கின்றான். 'அவன் பாக்கிங் காசு வாங்காவிட்டால் அந்த ஐம்பதையும் சேர்த்து நூற்றைம்பதாக வாகை மரத்தடியில் இரந்து நிற்கும் தாய்க்கு கொடுக்கலாம்' என்றொரு எண்ணம் வந்து போகின்றது. ஆனால் விரலிடுக்கில் ஐம்பது ரூபா ஏறிக் கொள்கிறது. அருகில்.... மிக அருகில் செல்கிறேன். அவன் விலகி நடக்கிறான். நான் அவனைப் பார்க்கிறேன். என் கை நீள்கிறது. அவன் அதைக் கண்டு கொள்ளவேயில்லை. நடந்து மறைகிறான். எனது சேர்ட் பையில் நூறு நூற்றைம்பதாகிறது.

மீண்டும் வங்கிகள் பெற்றோல் செற் கடந்து அதோ பெண்கள் பாடசாலை. பைக் வேகம் குறைகிறது. பாதி வீதியைப் பிடித்தபடி ஒரு கும்பல்..... என்னவாயிருக்கும்? ஓட்டமும் நடையுமாய்ச் சென்று எட்டிப் பார்க்கிறேன். விழுந்து கிடக்கும் ஒரு மோட்டசைக்கிள். பரந்து கிடக்கும் இரத்தத் திவலைகள். படபடப்பாக விசாரித்தபோது கையில் ஒரு சிறுமியைப் பிடித்தபடி மறு புறமாய் நடந்து வந்த ஒரு இளம் பெண் இந்தத் தாயின் குரலைக்கேட்டு காசை நீட்டி அழைக்கவே அவள் எதையும் கவனிக்காமல் ஓடி வந்திருக்கிறாள். வேகமாக வந்த மோட்டசைக்கிள் அவளை மோதித்தள்ளி அவனும் வீழ்ந்து இருவரையும் அருகிருந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டனர். அந்த ஏழைத்தாயின் நிலை கவலைக்கிடம் என்கிறார்கள்.

என் இதயத்தில் ஆயிரமாயிரம் ஊசிகள் சுரீரென்று தைத்து நிற்கின்றன. கண்களில் கண்ணீர் துளிர்த்து கன்னங்களால் வழிகிறது. சேர்ட்பையில் நூற்றைம்பது ரூபா என்னைப்பார்த்து சிரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாட்டுக்குடிலில் ஜனனம்



பீ. ஐ கைடி பொன்கலன்

பாரினில் பாலகனின் பிறப்பு,
காரிருளில் நிகழ்ந்த விழிப்பு,
ஊரினுள் யாருமறியா வியப்பு, - மனுமகன்
தேரினுள் வருவாரென சிறப்பு,
பூரிப்பினுள் பலருக்கு ஈர்ப்பு - அதுதான்
இரட்சகர் மாட்டுக்குடிலில் ஜனனம்!

சத்தியமாய் மக்களைக்காக்க வந்த காவலரே,
நித்தியமாய் இறைவன் எமக்கீந்த இன்பமே,
புத்தியாய் புவிதனில் உதித்த பூமகனே,
பக்தியமாய் பரமன் அருளிய கோமகனே,
வித்தியாசமாய் தந்திட்ட நறுமலரே - அதுதான்
இரட்சகர் மாட்டுக்குடிலில் ஜனனம்!

அனுதாபத்திற்கு இலக்கான பாலகனே,
அனுதினமும் நீயே எங்கள் பாலகனே,
அநுராகம் பாடியே உம்மைப் புகழ்வோமே,
அநுக்கிரகங்கள் பல தந்திடுமே பாலகனே,
அநுவரதமும் உம்மையே நினைக்குமெமக்கு - அதுதான்
இரட்சகர் மாட்டுக்குடிலில் ஜனனம்!



# பார்வைகள் பலவிதம் - 32

– ஹென்றி

அமெரிக்க உள்நாட்டுப் போர் நிகழ்ந்த நேரம். ஒருநாள் அமெரிக்க அரசத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் அவர்கள், சாதாரண உடையணிந்து தன் குதிரையில் ஏறிச்சென்றார். போகும் வழியில், ஒரு தளபதியின் குதிரை வண்டி சேற்றில் அகப்பட்டிருப்பதைப் பார்த்தார். அந்த வண்டியைச் சேற்றிலிருந்து வெளியேற்ற நான்கு வீரர்கள் வெகுவாக முயன்று கொண்டிருந்தனர். தளபதியோ அருகில் நின்று அவர்களுக்குக் கட்டளைகள் கொடுத்துக்கொண்டிருந்தார். அவ்வழியே சென்ற வாஷிங்டன் அவர்கள், தளபதியிடம் "ஏன் நீங்களும் இறங்கி உதவி செய்தால் வண்டியை வெளியில் எடுத்து விடலாமே" என்று சொன்னதற்கு தளபதி, "நான் ஒரு தளபதி" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். உடனே, வாஷிங்டன் அவர்கள் குதிரையிலிருந்து இறங்கி, வீரர்களுடன் சேர்ந்து முயற்சி செய்து வண்டியை வெளியில் தூக்கி விட்டார். பின்னர் தளபதியிடம், "அடுத்த முறை உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்கள் அரசத் தலைவரைக் கூப்பிடுங்கள்... நான் வந்து உதவி செய்கிறேன்" என்று சொல்லி தளபதியின் கையைக் குலுக்கினார். அப்போதுதான் தளபதிக்குப் புரிந்தது தன்னிடம் பேசிக்கொண்டிருப்பவர், அரசத் தலைவர் ஜார்ஜ் வாஷிங்டன் என்று.

"பதவி என்பது பணி செய்வதற்கே" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திரு அவைத் தலைவராகப் பொறுப்பேற்ற திருப்பலியில் வழங்கிய மறையுரையில் குறிப்பிடப்பட்ட சம்பவமாகும்.

"உங்கள் சொற்படி நடக்கும் ஊழியர்களுக்கு நீங்கள் உண்பதையே கொடுங்கள்; நீங்கள் உடுத்துவதையே அவர்களையும் உடுத்தச் செய்யுங்கள்; நீங்கள் மகிழும்படி நடக்காத ஊழியர்களை விலக்கி விடுங்கள். அவர்களை துன்புறுத்த வேண்டாம்"

– நபிகள் நாயகம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



– சென்ற இதழ்த் தொடர்ச்சி .....

# மனநலப் பாதிப்புகள்

J. பிரான்சிஸ் சேவியர்
நெல்சன் MAC, MSW, PhD,
இயக்குனர், போதை நோய் நலப்பணி, நாகர்கோவில்.

**தீவிரமான மனநலப்பாதிப்புகள் :**

தீவிரமான மனநலப்பாதிப்புகளை 'சைக்கோசிஸ்' (Psychosis) என்றும் கூறலாம். மிதமான மனநோயும் வளர்ந்து தீவிர மனநோயாகலாம். சில மனநோய்கள் ஆரம்பத்திலேயே தீவிரமானவையாகவே இருக்கலாம். மனச்சிதைவு நோய், மனக்கிளர்ச்சி தளர்ச்சிநோய், சந்தேக ஆளுமைநோய் என்பவை தீவிர மனநோய் வகையைச் சேர்ந்தவை. சிந்தனை, உணர்வு, செயல் இம்மூன்றும் தொடர்பின்றி இருப்பதை மனச்சிதைவு நோய் என்கிறோம். உணர்வுகளின் உச்சத்தில் அல்லது அடியில் இருப்பதை மனக்கிளர்ச்சி தளர்ச்சிநோய் என்கிறோம். தன்னைச்சுற்றி நடப்பவை அனைத்தையுமே சந்தேகத்தோடு பார்ப்பதை சந்தேக ஆளுமைநோய் என்கிறோம். தீவிரமான மனநோய்களில் ஒருசில தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டியவை. இவை முதிர் மனநோய்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**நடத்தை சார்ந்த மனநலப்பாதிப்புகள்**

நடத்தையில் உருவாகும் மனநலப்பாதிப்புக்களைப் போதையூட்டும் பொருட்கள் சார்ந்த மனநோய்கள், போதையூட்டும் செயல்முறை சார்ந்த மனநோய்கள், பாலியல் சார்ந்த மன நோய்கள், என்று மூன்று வகைப்படுத்தலாம். மது, புகையிலை, கஞ்சா, கெரோயின் இவற்றை சார்ந்திருப்பது போதையூட்டும் பொருட்கள் சார்ந்த மனநோய்கள். சூதாடுதல், ஆபாசப்படம் பார்த்தல், இணையத்தள மோகம், பொருட்கள் வாங்குவதில் வெறி இவற்றைச் சார்ந்திருப்பது போதையூட்டும் செயல்முறை சார்ந்த மனநோய்கள் என்கிறோம். துன்புறுத்திப் பாலின்பம் அனுபவித்தல், பாலுறுப்புகளை வெளிப்படையாகக் காட்டுதல், வண்புணர்வு செய்தல், அபாயகரமான பாலியல் செயல்பாடுகள் போன்றவை பாலியல் சார்ந்த நடத்தை மனநோய்கள் ஆகும். மனநோயின் அறிகுறிகளை வைத்து, அதன் தன்மையை அறிந்துகொண்டு, அதற்கு முறையான சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும்.

**மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி உதவலாம்?**

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்கு வரும்போது முதலில் அவர்கள் சார்ந்த அடிப்படைத் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. பின்பு மனநலப் பிரச்சினையைப் பொறுத்து மனநல மருத்துவத்தின் தேவையான அளவு நிர்ணயிக்கப்படுகிறது. வெளியிலிருந்தோ அல்லது தங்கியிருந்தோ, நலம் பெறுவதற்குப் பொருத்தமான சிகிச்சை முறை பரிந்துரைக்கப்படுகிறது. மனஅழுத்தம், மனப்பதற்றம், மனச்சோர்வு, மனச்சிதைவு என்று பாதிப்பின் தீவிரத்தை பொறுத்து அதற்கான சிகிச்சையின் வீரியம் அதிகரிக்கின்றது. தேவைக்கு ஏற்ப மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள் மிக முக்கியமாக ஆற்றுப்படுத்துதல் ஆகியவை கொடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநலம் பாதிப்பின் அளவு அதிகிரித்து மனநோய் என்ற நிலைக்கு வரும்போது இவற்றைக் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியம்.

- மனநோயை மற்ற நோய்களைப் போல நினைக்கவும், காணவும், அணுகவும் கற்றுக் கொள்ளுதல்.
- ஒருவர் வழக்கத்திற்குப் புறம்பாக வித்தியாசமாக நடந்து கொண்டால் மனநோயின் அறிகுறியாக இருக்கலாம் என்று புரிந்து கொள்ளுதல்.
- மனநோய்க்கான அடையாளங்கள் ஒருவரிடம் தென்பட்டால் அவரைக் காலம் தாழ்த்தாமல் மனநல மருத்துவம் பெறுவதற்கு அழைத்துச் செல்லுதல்.
- மனநோயாளிகள் வேண்டுமென்றே இப்படி நடந்து கொள்கிறார்கள் என்றில்லாமல் அவர்களும் அவதிப்படுகிறவர்கள் என்று ஏற்றுக்கொள்ளுதல்.

இந்தச் சிறு வழிகாட்டுதல்களை நாம் முறையாகக் கடைப்பிடித்தோமென்றால் மனநலம் பாதிக்கப்பட்டவருக்குச் சரியாக உதவுவதற்கு வசதியாக அமையும்.

**மனநோயின் அறிகுறியாக மனதிற்கு தேவைப்படும் மனநல ஆற்றுப்படுத்துதல்.**

"துன்புறும் உறுப்புகளின் அழுகைக் குரலே மனப்பாதிப்பின் அறிகுறி" என்பார் சார்க்கோ. "உடல்பாதிப்பைவிட மனப்பாதிப்புதான் மனிதரை அதிகம் அழிக்கவல்லது" என்று கூறுவார் சிசிரோ. "நோயுற்ற உன் மனதைக் கவனிக்கமாட்டாயா? மனதில் வேரூன்றிப் போன துயரங்களைப் பிடுங்கிப் போடமாட்டாயா? மூளையில் எழுதப் பட்டுக் கிடக்கும் துன்ப வரிகளை அழித்திடமாட்டாயா? இதயத்தை அழித்திப் பிழிந்து கொண்டிருக்கும் பயங்கர நினைவுகளை மாற்றமாட்டாயா?" என்று கூக்குரல் எழுப்புவார் ஷேக்ஸ்பியர் (மாக்பத்).

"உடலில் ஏற்படும் கட்டிகளையும் சீழையும் நீக்குவதற்கு மனதில் தோன்றும் கேடு விளைவிக்கும் எண்ணங்களை உணர்வுகளை நீக்குவதே முக்கியமானது" என்று எடுத்துரைப்பார் எபிக்டெடஸ்.

மனநலத்தோடு மனஅமைதியுடன் வாழ வேண்டுமானால் "என்னை எனக்குத் தெரியுமா? நான் யாரென என்னை நான் புரிந்துணர்ந்து வைத்திருக்கிறேனா?" என்ற இரண்டு கேள்விக்கும் பொருத்தமான பதில் கிடைக்க வேண்டும். "உன்னையறிந்தால், நீ உன்னையறிந்தால், உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலைவணங்காமல் நீ வாழலாம்" என்று திரைப் படப்பாடல் தெளிவாகவும், தீர்க்கமாகவும் இக் கருத்தை எடுத்துச் சொல்கிறது. இதையே மிக எளிமையாக "உன்னையே நீ அறிவாய்!" என்று சொன்னார் மாமேதை சோக்கிரட்டீஸ்

அமெரிக்க நாட்டில், நியூயோர்க் நகரில், மெட்ரோ ரயில் வண்டியில் எழுதப்பட்டிருந்த சில சிந்தனை வரிகள் என் நெஞ்சைக் கொள்ளை கொண்டன. இதோ அப்பொன் வரிகள்

- நான் ஏன் பிறந்தேன்?
- நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன்?
- நான் நலமாக, மகிழ்ச்சியாக, நிறைவாக இருக்க என்ன செய்ய விரும்புகிறேன்?

இக்கேள்விகளைப் புரிந்துகொண்டு இக் கேள்விகளுக்கான பதிலையும் தெளிவாக அறிந்து கொண்டு, கற்றுக்கொண்டதையும், பெற்றுக் கொண்டதையும் திறம்படச் செயல்படுத்தினால் மகிழ்வாக நிறைவாக மனநலத்தோடு நிச்சயமாக வாழலாம்.

**நிறைவாக**

பூட்டிக் கிடக்கும் வீட்டைத் திறக்க சரியான சாவியைத் தேடிக் கண்டுபிடிப்பது போல, மனதைத் திறந்து நலம் பெற வழி தெரியாது தவிக்கும் ஒருவருக்குத் திசைகாட்டி, அவரைச் சரியான பாதையில் நடைபயணத்தை தொடரச் செய்வதுதான் மனநல ஆற்றுப்படுத்தல். பிரச்சினைகள் எல்லோருக்கும் வரத்தான் செய்கின்றன. ஆனால் பிரச்சினைகளை முறையாக, நேரத்தோடு சந்திக்கும்போது அவை மனப்பிரச்சினைகள் ஆகாமல், மனநலத்தோடு மகிழ்ச்சியாக எந்தச் சூழ்நிலையிலும் வாழ்வாங்கு வாழ்ந்திட முடியும் என்று மனநல ஆற்றுப்படுத்துதல் வழிகாட்டுகிறது.

– நிறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல்

## பத்தாவது பாராளுமன்றம்

தேர்தல் திருவிழா நடைபெற்று முடிந்தது. மக்களின் தீர்ப்புக்களும் வெளிவந்து விட்டன. உண்மையில் மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட்டுள்ளனர். தூக்கி எறிய வேண்டியவர் களை தூக்கி வீசிவிட்டு ஓரளவு சரியானவர்களை தெரிவுசெய்துள்ளார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தேசிய ரீதியில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ளது. அது தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் உள்ளடங்களாக 159 ஆசனங் களைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் ஐவர் உட்பட 40 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரும் கட்சியாக இலங்கை தமிழரசுக்கட்சி தோற்றம் பெற்றுள்ளது. ஆனால் அது பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை எட்டுத்தான். புதிய ஜனநாயகமுன்னனி 'சிலிண்டர்' சின்னத்தில் போட்டியிட்டு இரண்டு தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் உட்பட 05 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இவ்வாறே சிறிலங்கா பொதுஜனபெரமுன, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தலா ஒவ்வொரு தேசியப்பட்டியல் உட்பட 03 ஆசனங்களை ஒவ்வொருவரும் பெற்றுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி (சங்கு), அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (சைக்கிள்), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (மயில்), சிறிலங்கா தொழில் கட்சி யாழ்ப்பாணம் சுயேச் சைக்குழு 17 என்பன தலா ஒவ்வொரு ஆசனங்க ளைப் பெற்றுள்ளன.

சர்வஜன அதிகாரம் கட்சி ஒரேயொரு தேசியப்பட்டியல் உறுப்பினரைப் பெற்றுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. "சமூக ஊடகங்களில் கூத்து நடத்திக்கொண்டிருந்த சுயேச்சைக்குழு ஒன்றும்" வெற்றிகொண்டுள்ளதாக தேசிய தமிழ் வார இதழ் ஒன்று தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகின்றது.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவுப் பேர லையை விடவும் "தமிழ் தேசியக் கட்சிகள்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கெண்டிருந்த கட்சிகளின் வெறுப்பான போட்டிகளும் கட்சிகளின் உள்வீட்டுக் குளறுபடிகளும் தமிழ் மக்களை விரக்தியடையச் செய்துள்ளமையும் திசைகாட்டியை பலப்படுத்தியுள்ளன. திசைகாட்டிக்கு வாக்களித்த சிங்கள மக்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி தமிழ், முஸ்லிம் வேட்பாளர்கட்கும் ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

பொதுஜனப் பெரமுன, மற்றும் அதன் தலைவர்கள் மீது பெரும்பான்மையின் மக்கள் கொண்டிருந்த எதிர்மனப்பான்மையும் திசைகாட்டி யினை வலுப்பெறச் செய்திருந்தது.

மிகவும் எளிமையான முறையில் மந்திரிசபை பொறுப்பேற்ற விதம் அனைவரையும் வியக்க வைத்ததுடன் ஜனாதிபதியின் மீது நம்பிக்கையும் கொள்ளவைத்தது. படையணியினரின் ஆராவா ரம், அணிவகுப்புகள் எதுவுமில்லை. மஞ்சள் உடையினரும் காணப்படவில்லை. ஜனாதிபதியின் உரையும் எளிமையாகவும் காத்திரமாகவும் இருந் தது. ஆனால் தமிழ் உரை பெயர்ப்பு தேர்தல் மேடைகளில் இருந்தது போல் இங்கும் இருந்தி ருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை மறைமாவட்ட ஆயரின் ஆலோச னையும், புத்திசாதுர்யமும் காரணமாக தமிழ்த் தேசிய வேட்பாளர்கள் ஒன்றிணைந்து போட்டியிட்ட மையால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஒன்று காப் பாற்றப்பட்டுள்ளது.

திகாமடுல்ல மாவட்டத்திலும் செத்துப் போய் விடும் என்ற தமிழ்ப் பிரதிநிதித்துவம் உயிர் பிக்கப்பட்டுவிட்டது. கடந்த பாராளுமன்றத் தேர்த லில் (2020) தமிழ்ப்பிரதிநிதித்துவம் இழக்கப் படவேண்டும் என்ற நோக்கத்தில் போட்டியிட்ட முன்னால் போராளியொருவரின் செயற்பாட்டால் அம்பாறையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப் பட்டது. தமிழரசுக் கட்சியின் ஒரேயொரு தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியைத்தான் பெற வேண்டும் என்ற நோக்கில் வடபகுதி கட்சியின் உறுப்பினர் ஒருவர் செயற்பட்டாராம். அப்போதைய கட்சியின் செயலாளராக இருந்த கி. துரைராசசிங்கம் அவர்களின் செயற்பாடு காரணமாக த. கலையரசன் தெரிவுசெய்யப்பட்டார். அதன் காரணமாக கி. துரைராசசிங்கம் தனது செயலாளர் பதவியிலிருந்து விலகவேண்டியிருந்தது. அதன் காரணமாக வைத்தியர் ப. சத்தியலிங்கம் புதிய பதில் செயலா ளரானார். திகாமடுல்ல மாவட்டத்திற்கு தமிழர் பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்பட்டது.

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி தனது வெற்றியை மூன்று ஆசனங் கள் பெற்றதன் மூலம் உறுதிப்படுத்திக்கொண்டது. பொருத்தமான வேட்பாளர் தெரிவும் இவ் வெற்றிக் கான காரணிகளில் ஒன்றாகும். அத்துடன் ஏனைய கட்சிகளின் தமிழ்வேட்பாளர்கட்கு கிடைக்க வேண்டிய ஆதரவுகளின் ஒருபகுதி 'திசைகாட்டிக்கு' சென்றதால் திசைகாட்டியிலும் தமிழ்வேட்பாளர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மொத்தம் ஐந்து உறுப்பினர்கள்.

எழுபதுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல் ஒன்றில் (அப்போது மட்டக்களப்பு தேர்தல் தொகுதி இரட்டை அங்கத்துவத்தொகுதி) ஒன்று தமிழர்களுக்கானது; மற்றையது முஸ்லிம்க ளுக்கானது. இது போன்று மூதூர் தொகுதியும் இரட்டை அங்கத்துவத்தொகுதி) மட்டக்களப்பில் இரண்டு தமிழர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஒருவர் செல்லையா இராசதுரை, மற்றையவர் இராஜன் செல்வநாயகம்.

கணிசமான தமிழ்தேசியக் கட்சிகளை வாக்கா ளர்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். அது ஏன் என்று அனைவருக்கும் தெரியும். இலங்கை தமிழர்கள் ஒரு தேசிய இனம். அதற்கென்று தனிமொழி, கலை கலாச்சாரங்கள் உண்டு. இலங்கை தேசியம் என்ற செயற்பாட்டில் அள்ளுண்டு அவற்றை இழந்துவிடக்கூடாது என்ப தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

தமிழர்கள் இலங்கையராகவும் இருக்க வேண்டும். அதேவேளையில் தமிழ்தேசிய உணர் வாளர்களாகவும் இருக்கவேண்டும். சுய அடையா ளத்தை இழந்துவிடவும் கூடாது என்று செல்லையா அண்ணர் கூறுகிறார்.

## நிக்கோலாஸ் கோப்பர்னிக்கஸ்

... மத நம்பிக்கைகளுக்கு எதிரான கொள்கைகள் மதவாதிகளால் உணரப்பட்டன. நூல் வெளி வந்து 73 ஆண்டுகள் கழித்தே கி. பி. 1616 இல் இந்நூல் தடை செய்யப்பட்டது. 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இத்தடை விலக்கப் படவில்லை.

கோப்பர்னிக்கஸ் ஒரு மருத்துவராகவும், ஒரு நீதிபதியாகவும், ஆளுநராகவும், பொருளாதார நிபுணராகவும், கணிதவியலாளராகவும் விளங்கி யதுடன் கத்தோலிக்க மத குருவாகவும் இருந் தார். எனினும் மதக் கொள்கைகளுக்கு எதிரான சூரிய மையக் கொள்கையை அவர் வெளியிடத் தயங்கவில்லை.

கோப்பர்னிக்கஸ் 1543இல் இறக்கும் சந்தர்ப் பத்தில் பக்கவாதம் தாக்கி ஆழ்மயக்க நிலை யில் இருந்தார். ஆழ்நிலை மயக்கத்தில் அவர் இருந்தபோது அவரது நூல் அச்சிட்டு எடுத்து வரப்பட்டு அவரது கரங்களில் வைக்கப்பட்டது. உடனே அவர் தனது ஆழ்மயக்க நிலையிலிருந்து மீண்டு, விழிப்புணர்வு பெற்றுத் தனது வாழ்நாள் சாதனையான அந்நூலைப் பார்த்தபின் தான் இறந்தார் என்று கூறப்படுகிறது. •••

"கோபத்தை எவன் ஒருவன்
தணிக்கிறானோ அவன் வாழ்க்கை
முன்னேறும். அந்த கோபத்தை
தணிப்பதற்குரிய சாதனங்களே சிரிப்பும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி இலக்கம் - 58

*முதலில் வரும் ஐந்து வினாக்களும் லூக்கா:1-10 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

1) சிமியோன் மரியாவை நோக்கி கூறியதென்ன? ..........

2) இருவகை அடித்தளங்களும் யாருக்கு ஒப்பாவார்கள் என இயேசு எடுத்துக்காட்டாக கூறுகின்றார்? ..........

3) "இக்குழந்தையின் பெயர் யோவான்" என்று செக்கரியா எழுதிய பின் நடந்த நிகழ்வு என்ன? ..........

4) ஆசிரியரான லூக்கா நற்செய்தியாளரைப்பற்றி குறிப்பிடுக? ..........

5) சீடர்கள் செல்லும் ஊர்களில் மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்கு இயேசு கூறிய அறிவுரை என்ன? ..........

6) இயற்பியலாளரான அந்துவான் ஹன்றி பெக்கெரல் பெற்ற விருதுகள் எவை? ..........

7) திரிதெந்தீன் திருச்சங்கம் மூலம் முன்வைக்கப்பட்ட மறுமலர்ச்சித் திட்டம் என்ன? ..........

8) இந்தியாவில் மிகப்பெரிய நூலகம் உள்ள இடம் எது? ..........

9) 2024ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் யார்? அவர் எந்த நாட்டைச்சேர்ந்தவர்? ..........

10) மனநல மருத்துவத்தை ஆராய்ச்சி செய்து கருத்துக்கள் வெளியிட்ட மனநல அறிஞர்கள் நான்கு பேரைக் குறிப்பிடுக? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

பங்கு : ..........

தொ.பே.இல: ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 58**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**முடிவுத் திகதி : 30.12.2024**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருஅவைச் செய்திகள்!

## கனவு காணும் திறன் படைத்த இளைஞர்கள்

நவம்பர் மாதம் 16ம் திகதி சனிக்கிழமை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் இத்தாலிய தேசிய இளையோர் மன்ற உறுப்பினர்கள் ஏறக்குறைய 100 பேரைச் சந்தித்தபோது "இளைஞர்கள் கனவு காணும் திறன் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்றும், கனவு காணும் திறனை இழந்தவர்கள் வயதானவர்களாக அல்ல, மாறாக வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றவர்களாக மாறுகின்றார்கள்" என்றும் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அவ்வமைப்பின் 20 ஆவது ஆண்டிற்காக தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். 'எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது' என்ற யூபிலி 2025 ஆம் ஆண்டு மையக்கருத்தை முன்வைத்து இளையோரிடம் உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையுடன் எதிர்காலத்தைக் காண்பதால் மனச்சோர்வு அடைபவர்களை நாம அடிக்கடி சந்திக்கின்றோம், எனவே இளையோர் எதிர்நோக்கின் கைவினைஞர்களாக இருப்பது எப்படி என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார். எதிர்நோக்கு இளைஞர்களிடமிருந்து ஒருபோதும் திருடப்படக் கூடாது என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், நிறுவனங்களுடனான உரையாடல் வழியாக, உள்ளூர், தேசிய மற்றும் ஐரோப்பிய மட்டங்களில் இளைஞர்களின் உலகத்தைப் முன்னிலைப்படுத்த அழைக்கப்படும் ஆலோசனைக் குழுவாக இருக்கும் அவ்வமைப்பினர், வலையமைப்பின் வழியாக இளையோர் செயலில் பங்கேற்பதை ஊக்குவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குரலற்றவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றும், வறுமை, கல்வியறிவு, போதைப்பொருள் ஆதிக்கம் போன்ற பிரச்சினைகளால் சமூக ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள், கனவு காண முடியாதவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என அனைவருக்காகவும் குரல் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். ⚜

## சிறைப்பணியாற்ற முன்வாருங்கள்

நவம்பர் மாதம் 16ம் திகதி சனிக்கிழமை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் Pamplona, Tudela, San Sebastián மறைமாவட்டம் மற்றும் Redemptoris Mater சபையின் குருத்துவ மாணவர்கள் என ஏறக்குறைய 40 பேரைச் சந்தித்தபோது "குருத்துவ அருள்பொழிவு பெற இருக்கும் மாணவர்கள் சிறைப்பணியாற்ற முன்வர வேண்டும்" என்றும், 'கலாச்சாரம், சமூகம், தீமைகள், மறைக்கப்பட்ட பாவங்கள் போன்ற பல சங்கிலிகளால் சிறைபிடிக்கப் பட்டிருக்கும் மக்களை மீட்க முன்வர வேண்டும்" என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். புனித வியாழனன்று பெண்கள் சிறைக்குச் சென்று, தான் அவர்களின் பாதங்களைக் கழுவியதை எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், சிறைக்கைதிகளில் இருந்த ஒரு பெண் தன்னை அழைத்து தனது மகனையே தான் கொன்றதாகக் கூறியதை அருள்பணித்துவ மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அரசு சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் வழங்குங்கள் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஆறுதல் என்னும் எண்ணெயையும், எதிர்நோக்கு என்னும் திராட்சை இரசத்தையும் அவர்களுக்கு வழங்குங்கள் என்றும், சுரண்டல், ஊக்கமின்மை, அறியாமை மற்றும் கடவுளை மறத்தல் போன்றவற்றி-னால் வாடும் மக்க ளுக்காகப் பணியாற்றவும் வலியுறுத்தினார்.

மேலும், முன்பே தயாரிக்கப்பட்டிருந்த கருத்துக்கள் அடங்கிய உரையினை எழுதுவடிவில் அருள்பணித்துவ மாணவர்களுக்கு வழங்கினார் திருத்தந்தை. ⚜

## இலங்கையில் பயங்கரவாத சட்டத்தை நீக்கக் கோரும் வழக்கறிஞர் குழு!

நவம்பர் மாதம் 3ம் திகதி வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையொன்றில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான உறுதிமொழியை அரசுத் தலைவர் அனுரகுமார திஸநாயக்க மதிக்க வேண்டும்" என யூக்கான் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் தக்கவைக்கப்படட்டும், ஆனால் அது தவறாகப் பயன்படுத்தப்படாது என்று அரசு அதிகாரிகள் மற்றும் செய்தித் தொடர்பாளர்களின் அண்மைய அறிக்கைகள் குறித்து வழக்கறிஞர் மன்றம் மிகுந்த கவலையை வெளிப்படுத்தியது என்றும் குறிப்பிடுகிறது அச்செய்-திக் குறிப்பு.

செப்டம்பர் மாதம் நிகழ்ந்த தேர்தல் பிரச்சாரத்தின் போது பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அதன் முறைகேடுகளுக்கு எதிராக அவரது தேசிய மக்கள் சக்தி கூட்டணி தீவிரமாக வாதிட்டதை அரசுத் தலைவருக்கு நினைவுபடுத்தும் வகையில், "இது மிகவும் கவலைக்குரியது" என்று வழக்கறிஞர்கள் மன்றம் கூறியதையும் எடுத்துக்காட்டியுள்ளது அச்செய்தி நிறுவனம்.

⚜



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வினாவிடைப் போட்டி - 56 விடைகள்

1. இஸ்ரயேலைக் காப்பதற்காக கடவுள் மக்கபெயரைத் தேர்ந்தெடுத்து வரலாற்றில் அவர்களோடு செயல்படுகிறார். அவர் மீது பற்றுறுதி கொள்வோருக்கு வெற்றி அருள்கிறார் என்னும் செய்தியை இந்நூல் வலியுறுத்துகிறது.

2. பெற்பீடம், விளக்குத்தண்டு, காணிக்கை அப்பமேசை, நீர்மப் படையலுக்கான குவளைகள், கிண்ணங்கள், பொன் கிண்ணங்கள், திரை, பொன்முடிகள், கோவில் முகப்பில் இருந்த பொன் அணிகலன்கள, வெள்ளி பொன் விலையுயர்ந்த கலன்கள்

3. பக்தர்கள், சமயப்பணியார்வமுடையோர் எனப்பொருள். இவர்களே எஸ்ஸேனியர், பரிசேயர் ஆகியோருக்கு முன்னோடிகள்.

4. யோனத்தானும், சீமோனும் தன் சகோதரனான யூதாவை தூக்கிக்கொண்டு போய் மோதயின் நகரில் தங்கள் மூதாதையரின் கல்லறையில் அடக்கம் செய்தனர்.

5. எருசலேமைச்சுற்றிலும் உம் தூயவர்களுடைய உடலைச் சிதறடித்தார்கள். அவர்களின் இரத்தத்தை சிந்தினார்கள். அவர்களை அடக்கம் செய்ய ஒருவரும் இல்லை.

6. 1657ம் ஆண்டு யூன்மாதம் 3ம்திகதி அவரின் 75வது வயதில்.

7. சீனா, திட்டத்தின் பெயர் லாங் மார்ச் -05

8. கார்மேல் சபையின் அதிபர் சைமன் ஸ்டோக் என்பவருக்கு காட்சி கொடுத்தார். கி.பி 1251ம் ஆண்டு கார்மேல் மலை சிற்றாலயத்தில் வைத்து வானதூதர்கள் புடைசூழ கையில் உத்தரியம் தாங்கியவராய் காட்சி கொடுத்தார்.

9. தெளிவத்த ஜோசப்

10. அமெரிக்காவில் பிறந்தார். 117வது வயதில் காலமானார்.

### சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு: 1000/=**

**க. எலிசா,**
54/17, 7ம் குறுக்கு,
இருதயபுரம் மேற்கு,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு: 700/=**

**யேசுநேசன் எமல்டா ஏஞ்சல்,**
கடற்கரை வீதி,
தாழங்குடா - 03.

**மூன்றாம் பரிசு: 500/=**

**ஜெகர்ஷியா ஷெமிரா,**
சாஸ்திரியார் வீதி,
மாங்காடு - 2.

போட்டியில் பங்குகொண்டோர் - 05 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

### 7 வயது சிறுவனுக்கு வேலை வாய்ப்பு

"மொசார்ட்" என வர்ணிக்கப்படும் ஏழு வயது சிறுவனுக்கு ரஷ்ய மென்பொருள் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் பேர்க்கைச் சேர்ந்த செர்ஜி என்ற சிறுவன் கடந்த இரண்டு ஆண்டுகளாக கணினி மொழி மென்பொருளை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த வீடியோக்களை தனது யூடியூபில் கணக்கில் பகிர்ந்து வருகிறார். இந்த சிறுவனின் வீடியோக்கள் "ப்ரோ32" என்ற தகவல் பாதுகாப்பு நிறுவனத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்த நிறுவனம் அவருக்கு வேலை செய்யும் வயதை அடைந்தவுடன் நிறுவனத்தின் பெரு நிறுவன பயிற்சியின் தலைவராக பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குவதாக அறிவித்துள்ளது. இது குறித்து ப்ரோ32 நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி இகோர் மாண்டிக் பிபிசியிடம் தெரிவித்துள்ளதாவது, வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை குறித்து சிறுவனின் பெற்றோர் சந்தோசமடைந்துள்ளனர். அவரது தந்தை கிரில் ஆச்சரியமடைந்ததோடு, மிகவும் சந்தோசமாக இருப்பதாகவும், மகன் செர்ஜி நிறுவனத்தில் வேலைக்கு சேரும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

— 'வீரகேசரி' நவ. 21

**போட்டிக்கான பரிசுகள் அனுசரணை:**
திரு. லெஸ்லிராஜ்
ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி,
தன்னாமுனை.
0779780151



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி
## 183 முடிவுகள்




1ம் பரிசு - 700/=

**L.J. ரிதுஷாந்த்,**
67/01, கொக்குவில் வீதி,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.



2ம் பரிசு - 500/=

**ஜொயணி திரேஷாரா ஒக்கஸ்,**
17A, பிரதான வீதி,
கறுவாக்கேணி,
வாழைச்சேனை.



3ம் பரிசு - 300/=

**ப. சாக்ஷியா,**
131/c, பிரதான வீதி,
சொறிக்கல்முனை - 01.

**போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகள்....**



# உள் உள்நோக்கிப் பார்!

யாங்ஃபு என்ற இளைஞன், தன் பெற்றோரை நீங்கி, குருவைத் தேடிப் புறப்பட்டான். வழியில் ஒரு ஜென் குருவைச் சந்தித்தான். தான் ஆன்மீகத்தில் சிறக்க விரும்புவதாக அவரிடம் தெரிவித்தான்.

"வேறு யாரோ ஒரு குருவைத் தேடிப் போவதைவிட புத்தரையே நீ சந்திக்கலாமே?" என்றார் அவர்.

"புத்தரா... அவரை எங்கே காண முடியும்?" என்று யாங்ஃபு பரபரத்தான்.

"நீ வீட்டுக்குத் திரும்பும்போது, தோளில் போர்வை போர்த்தி, காலணிகளை மாற்றிப் போட்டுக்கொண்டு ஒரு நபர் உன்னை எதிர்கொள்வார்: அவரே புத்தர்" என்றார் குரு. யாங்ஃபு அவசரமாக வீடு திரும்பினான். தன் மகனை வரவேற்கும் பரபரப்பில், அவன் தாய் காலணிகளை மாற்றிப் போட்டுக்கொண்டபடி, தோளில் போர்த்திய போர்வையுடன் கதவைத் திறந்தார். அவரைப் பார்த்த கணத்தில் யாங்ஃபு ஞானம் பெற்றான்!

ஆன்மீகமும் அப்படித்தான். திசை புரிந்து விட்டால் அங்குலத் தொலைவு கூட இல்லை. ஆன்மீகத் தேடுதல் என்பது கடவுளையோ, சொர்க்கத்தையோ, வேறு உலகத்தையோ வெளியே தேடிப்போவது அல்ல: உள்ளே இருக்கும் ஆன்மா பற்றியது. அது இந்த உயிரை முழுமையாகப் புரிந்து கொள்ளும் ஒரு நோக்கம். உள்நோக்கிப் பார்த்தால்தான் புரிந்துகொள்ள முடியும்.

வெளிப்படையான உடலை மட்டும் புரிந்து கொள்வதாலோ, அல்லது மனதை மட்டும் புரிந்துகொள்வதாலோ வாழ்க்கை முழுமை யாகாது. இது இரண்டையும் உருவாக்கும் சக்தி உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது. உள்நோக்கிப் பார்த்துப் பழக்கம் இல்லாத நமக்கு, வெளியில் இருந்து திசை காட்ட அதைவிடுத்து, காடு, மலை, கழனி என்று உலகம் முழுதும் சுற்றினாலும் பயனில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பணி ஆர்.திருச்செல்வம் அடிகளாரின் இறுதி ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி



இறந்த ஆயர்கள் குருக்கள் அருட்சகோதர மற்றும் அருட்சகோதரிகளின் ஆத்துமாக்களின் நித்திய இளைப்பற்றி திருப்பலி - புனித மரியாள் பேராலயம்



அருட்தந்தை L. K. மரியதாசன் அவர்களின் 60வது குருத்துவ (வைர விழா) நிகழ்வு

